வாரமலர் * Registered as News paper in Ceylon விலை சதம் 35

# ஈழநாடு
THE EELANADU

மலர் 16 சித்திரை 1 ரபி:அவ் 20 ஞாயிற்றுக்கிழமை (14—4—74) இதழ் 6

புத்தாண்டு வாழ்த்துக்கள்
அன்பர்கள், ஆதரவாளர்கள்,
விற்பனையாளர்கள், பாவிப்பாளர்கள்
அனைவருக்கும்
எமது உளம் கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.
மில்க் வைற்
சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77,
யாழ்ப்பாணம்.

## நமது நோக்கு

இன்று பிறக்கும் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, இந்நாட்டில் வசிக்கும் இவ்விரு முக்கிய சமூகத்தவருக்கும் நமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

இரு சமூகங்களைச் சேர்ந்த பொதுமக்களும் நல்லுறவு கொண்டு ஒத்துழைத்து வாழ வேண்டுமென்றே விரும்புகின்றனர். எனினும், அவர்களது பிரதிநிதிகளான தலைவர்களிடையே துரதிருஷ்டவசமாக கட்சி முதலிய வேற்றுமைகள் அதிகரித்து இரு சமூகங்களுக்கிடையில் மட்டுமன்றி, ஒவ்வொரு சமூகத்திற்குள்ளும் கூட வேற்றுமைகள் அதிகமாகவுள்ளன.

இந்த வேற்றுமைகளே எமது சங்கடங்களில் பலவற்றுக்கும் காரணமெனில் அது தவறாகாது.

ஆனால் இன்றிருக்கும் அரசியல் முதலிய சூழ்நிலைகள், கட்சி வேற்றுமைகள் குறைவதற்கு பதில் அதிகரிப்பதாகவே தோன்றுகின்றன.

என்றுமில்லாத சங்கடங்கள் தாங்கமுடியாத அளவுக்கு அதிகரித்து போது மக்கள் கொதித்து எழுவதால், பிரிந்துள்ள கட்சிகளும், தலைவர்களும் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது.

இலங்கை அரசியலில் வடக்கு கிழக்கு மாகாணங்களும் அங்குள்ள மக்களும் ஒதுக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களது ஒத்துழைப்பு இன்றியமையாதது என்பதை உணர்ந்து தென்னிலங்கையைச் சேர்ந்த இரு பெரும் கட்சிகளும் அவர்களது நட்பையும் நம்பிக்கையையும் பெற இப்போது போட்டிபோடுகின்றன. இது வரவேற்கத்தக்கதோர் நல்ல அறிகுறி.

இந்நாட்டிலே உணவுப்பஞ்சம் ஏற்பட்டு, பட்டினியால் மக்கள் மடிவதைக்கண்டதும் பிரிந்திருந்த தொழிற்சங்கத் தலைவர்களும் மீண்டும் ஒன்றுகூடுகின்றனர். அப்பாவிகளான அவர்களின் விமோசனத்துக்கு இது முதற்படியாகும்.

# நாட்டின் பொறுப்புகள் விவசாயிகள் கையில்தான!

## ஐக்கிய இலங்கை உருவாக சூரியர் அழைப்பு

(ராமா ராஜகோபால்)

"விவசாயிகளின் கையில்தான் நமது பாரம்பரியமும் பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவர்களே பல்லாயிரம் ஆண்டுகளாக சைவத்தையும் தமிழையும். சிங்களப் பகுதிகளில் பௌத்தத்தையும் பேணிப்பாதுகாத்து வந்துள்ளனர். தொழிலாளர்களும் விவசாயிகளும் ஒன்றுபட்டு வலுப்பெற்ற இலங்கையை சிருஷ்டிக்க வேண்டும்'' என்று தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் நேற்று என்னிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூன்று இனமக்கள் வாழும் நம்நாட்டில் பிரதானமான இரு இனங்கள் புத்தாண்டு விழாவை ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இருந்துவரும் பாரம்பரிய வழியில் இன்று கொண்டாடுகின்றனர். இந்நிலையில் எம்முடைய குடியரசுத்தன்மையும் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. அடிப்படையாகக் குடியரசின் நோக்கம் தேசிய ஒருமைப்பாட்டைப் பேணுவதோடு, ஒவ்வொரு இனமும் தமது தனித்தன்மையையும் காத்துக் கொள்வதேயாகும். இந்த அடிப்படையில் தான் ஐக்கிய முன்னணி அரசு கடந்த நான்கு ஆண்டுகளிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முக்கியமான எழுச்சி பெற்ற ஒரு பொருளாதார நிலைமையை ஏற்படுத்தியது. இது அடிப்படையில் விவசாய முறைகளைக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது. இதன்பலனாக நூற்றுக்கு எண்பது சதவிகிதமான விவசாயிகள் மேம்பாடான வாழ்க்கை நிலையை எய்தியுள்ளனர். இந்த விவசாயிகளின் கையில்தான் நமது பாரம்பரிய பொறுப்புகளும் சமுதாயத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவர்களே பல்லாயிரம் ஆண்டுகளாக சைவத்தையும், தமிழையும் சிங்கள பகுதிகளில் பௌத்தத்தையும் பேணிப்பாதுகாத்து வந்துள்ளனர். இந்தப் புத்தாண்டு கொண்டாடும் வேளையில் மேம்பாடான வாழ்க்கை நிலைகளை எய்தி எமது பாரம்பரியத்தையும் தனித்துவங்களையும் கைவிடாது பேணிக்காத்து நாட்டின் ஒருமைப்பாட்டின் அடிப்படையில் புதுவாழ்வு அமைப்பார்களாக.

வளர்ந்துவரும் விவசாய எழுச்சியைக்கொண்டு கைத்தொழில்களும் மற்றும் பல தொழிலாள வர்க்கத்தினரது வாழ்க்கைத்தரமும் மேம்படுவதை நாம் காணலாம். இதேபோல அடிப்படையில் இப்படியான கைத்தொழில் வளர்ச்சியையும், தொழிலாள வர்க்கத்தினது மேம்பாட்டை இன்னும் வளர்க்கவும் அரசு ஊக்குவிக்கும் இவ்வேளையில் இப்புத்தாண்டு நாளில் தொழிலாளர்களும், விவசாயிகளும் ஒன்றுபட்டு, ஐக்கியப்பட்டு, வலுப்பெற்ற இலங்கையை சிருஷ்டிக்கப் பிரார்த்திப்போமாக.

### அரசாங்க அதிபர் வாழ்த்து

வாழ். மாவட்டம் ஆனந்த ஆண்டு பூராவும் சகலதுறைகளிலும் உற்பத்தி பெருகி செழிப்புடன் விளங்க வேண்டும்!

மாவட்ட மக்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த வாழ்த்துக்களும் நல்லாசியும் உரித்தாகுக!

வாசக நேயர்கள்
விளம்பரதாரர்கள்
அனைவருக்கும் எமது
புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

எல்லோருக்கும் எமது அன்புகலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

## ஜும்மா பள்ளிவாசலில் யு. என். பி. அன்னதானம்!

யாழ்ப்பாணம், ஞாயிறு காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவின் முதலாவது சிரார்த்த தினத்தில் யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசலில் அன்னதானமும் பிரார்த்தனையும் இன்று நடாத்தப்படுகிறது.

வடபகுதி யு. என். பி. யினர் இந்த அன்னதானத்தை நடாத்துகின்றனர்.

இன்று பகல் ஏழைமக்களுக்கு டட்லியின் சிரார்த்ததினத்தை யொட்டி இந்த அன்னதானம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடபகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கைப்பிறந்தால் நியாயம் பிறக்குமென்பார்கள். இன்று பிறக்கும் ஆனந்தவருடம், உண்மையாக நம்மிடையே ஒற்றுமையைப் பலப்படுத்தி, எல்லோருக்கும் ஆனந்த மளிக்கவேண்டுமென்றே நம்பிக்கையுடன் பிரார்த்திக்கின்றோம்.



GEM PALACE
R. G. BUILDING—KANNATHIDDY —JAFFNA
இன்று மாலை 5.15 மணிக்கு இலங்கை வானொலியில் எமது ''விசேட நிகழ்ச்சியை'' கேட்டு மகிழுங்கள்.

எல்லோருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
CSK
துரிதமான சலவைக்கும்
பிரகாசமான சலவைக்கும்
ஓஹோ சோப்
தயாரிப்பாளர்கள் ஓஹோ சோப் இன்டஸ்ட்றீஸ் - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் — நாவற்குழியில் மூன்று கட்டிட காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு. த. லான்ட் இன்வெஸ்ட்மென்ற். 17, சம்பத் வீதி, யாழ்ப்பாணம். 52

நாவற்குழி, கண்டி றோட்டில் 8 பரப்பு காணித்துண்டுகள் விற்பனை. விபரங்களுக்கு: திருஞானம் ஒடிற்றர், வருமானவரி ஆலோசகர், யாழ்ப்பாணம். 59

நல்லூர் கோவிலுக்கு அண்மையிலும் பாடசாலை, புகையிரத நிலையம், வைத்தியசாலை ஆகியவற்றிற்கு அண்மையிலும் மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விரும்புவோர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 49, C/o ஈழநாடு. த. பெ. எண்: 49, யாழ்ப்பாணம். 49

எங்களிடம் அரைத்த உப்பு மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். உப்புகளுக்கு அரைத்தும் கொடுக்கப்படும். முகவரி இறைண்டிங் மில்ஸ், 443, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 611. 41

யாழ்ப்பாணம் மெயின் வீதியிலிருந்து 100 அடி தூரத்திற்குள் வீடு கட்டப் பொருத்தமான 1 1/2 பரப்பு வெற்றுக் காணி, 60 அடி றோட்டு முகப்புடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: 170, மெயின் வீதி யாழ்ப்பாணம். 61

### விற்பனைக்கு

மல்லாகம், காங்கேசன்துறை வீதி பாடசாலை ஒழுங்கையில் சிலிம்பிலார்கொல்லை என்னும் காணியில் நீதமான நிலம் பர. இல 5½ விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 66, C/o ஈழநாடு, த.பெ. எண்: 49, யாழ்ப்பாணம். 66

### தேவை

ஆங்கில தட்டெழுத்து தெரிந்த பெண் ஒருவர் தேவை. நற்சாட்சிப்பத்திரப் பிரதிகளுடன் ஆங்கிலத்தில் கடித மூலம் விண்ணப்பிக்கவும். முகாமையாளர், 108/3, முதலியார் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 65

யாழ்ப்பாணத்தில் உள்ள மேல்நாட்டுக் குடிவகை விற்பனை ஸ்தாபனத்திற்கு கணக்குகள் எழுதுவதில் அனுபவமுள்ள மனேஜர் தேவை. எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 91/A, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம். 47

### ஆசிரியர் தேவை

பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சியைப் பெற்ற பாலர் பாடசாலை ஆசிரியைகட்கும் ஜி. சி. ஈ. தராதரம் பெற்றவர்களுக்கும் ஆரம்பிக்கவிருக்கும் இலவச பாலர் பாடசாலை ஆசிரிய பயிற்சி வகுப்புக்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விளம்பர இல. 12, C/o ஈழநாடு. த. பெ. எண் 49, யாழ்ப்பாணம். 12

### வைத்தியம்

தோல் நோய், சரும வியாதி மூதலிய வற்றுக்கு ஆலோசனையும் சிகிச்சையும் அளிக்கப்படும். காலை 8 மணி முதல் 12 மணி வரை. வில்வ பாரதி தோல் நோய் சிகிச்சை நிலையம், ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீநகர் இனிமாவுக்கு அண்மையில்) யாழ்ப்பாணம். 90

### வாடகைக்கு

அத்தியடி புதிய றோட்டில் 68-ம் இலக்க வீடு உடனடியாக வாடகைக்குண்டு. 3 அறை, கிணறு மலசலகூட வசதிகள் உண்டு. தொடர்பு கொள்ளும் விலாசம்: மு. தனபாலசிங்கம் வி. முருகேசு மேற்பார்த்து, விம்ல வாசா, ஊரெழு மேற்கு, சுன்னாகம். 53

### கல்வி

G. C. E. (A L), G. C. E. (O L), Prep வகுப்புகளுக்கு ஆங்கிலம், ஆங்கில இலக்கியம், பொருளாதாரம் முதலிய கல்விப்பாடங்கள் தகுந்த ஆசிரியர்களினால் கற்றுக்கொடுக்கப்படும். குருகுலம், G. இராசன், M. A (Hons), 5, சபாபதிப்பிள்ளை தெரு, சுன்னாகம். 55

### WANTED

Postal College in Jaffna requires Manager with Security. Prospects of being made Partner. Frajmal Enterprises. 213/1, Power House Road, Jaffna. 54

# புத்தாண்டு!



பகலவன் மேட ராசிப்
பந்தியிற் சேர்ந்து நிற்கப்
பகலொடு இரவும் பாகிற்
பன்னிரு மணித்தி யாலஞ்
சுந்தரச் சமனும் நிற்கச்
சூரியன் உதய மாகப்
புகுந்திடும் புதிய ஆண்டு
ஃ
புண்ணிய காலந் தன்னில்
இலைகளும் அறுகும் சேர்
எழில்பெறு மஞ்சள் சேரப்
பலவகை மலர்கள் சேரப்
பசுவினின் பாலுஞ் சேரச்
சலமுடன் சேர்த்துச் செய்யும்
தாமுடை மருத்து நீரைத்
தலையினிற் தேய்த்துத் தேய்த்துச்
சலத்தில்நீ ராடு வாரே.

### வேறு

பொங்கலொடு பூசையெலாம் புரிந்து வீட்டிற்
புகழீட்டும் மங்கலநற் பொருட்கள் பூண்டு
தங்கநிறச் சூரியனைத் தரிசித் தாங்கு
தலைவணங்கித் தோத்திரங்கள் சரியாய்ப் பாடிப்
பொங்கலினை வயிறெல்லாம் புடைக்க உண்டு
புக்கையிலை வறியோர்க்குப் புசிக்க ஈந்து
மங்கலமாய் இவ்வருடம் வாழ வெண்ணி
மனமார இறைவனடி வணக்கஞ் செய்வார்.
ஃ
புனிதமொடு புத்தாடை அணிகள் பூண்டு
புகழுடைய பல தருமம் புரிந்து சீராய்த்
தனியிறைவன் புகழ்பாடித் தம்மூர்க் கோயிற்
சந்நிதியிற் தரிசனங்கள் சரியாய்ச் செய்து
கனவான்கள் பெரியோர்கள் கனிக நற்றோர்
கற்றோர்கள் அனைவரையும் காணப் பெற்று
மனமொத்த உறவினர்கள் மற்றும் உற்றோர்
மாளிகைசென் றுறவாடி மகிழ்வர் மாதோ.

—"அன்னைமூலை"


ஆனந்தவருடத்தில் ஆனந்தமாகக் கொண்டாட 'அண்ணா கோப்பி'யை வாங்கி அன்பளிப்பாகக் கொடுக்கும் அழகிய மூவர்ண இலட்சுமி படத்தையும், ஒரு பிளாஸ்ரிக் பாக்கையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளவேண்டும். கோப்பிப் பெட்டி உள்ளே இருக்கும் கூப்பனை நிரப்பிக்கொடுத்து உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துக் கொள்ளுங்கள்.

**அண்ணா கோப்பி**
**விளம்பர நிலையம்**
மருதடி விநாயகர் ஆலயம்


### பித்தன் தபால்கள்

[12ம் பக்கத் தொடர்ச்சி]

யில் தேறி தகுதிபெற்ற மாணவர்கள், மீண்டும் பரீட்சை எழுதாமலே, பல்கலைக்கழகத்தில் சேரமுடியுமாறு அனுமதிப்பீர்களா? தரப்படுத்தல் எனும் கூடாத முறையை ஒழிப்பீர்களா?

எப்படியும் பதவியைவிட்டு விலகிவிடாமல், மேற்குறித்த நடவடிக்கைகளை எடுப்பின், தங்கள் மீது மாணவ உலகுக்கு உள்ள கோபம் பெரிதும் தணியக்கூடும்.

இப்படிக்கு,
பித்தன்.

குறிப்பு:

பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம்பெற்றும் பலர்வேலையின்றித்தவிக்கின்றார்கள், சோஷலிஸ நாடுகளில் வேலையில்லாக் கஷ்டமே கிடையாதென்று கேள்விப்பட்டேன். அவ்விதமே இங்கு ஏதும்செய்யமுடியாதா? முடியாவிட்டால், அந்நியர்களால் ஏற்படுத்திய இந்தக் கல்விமுறை எதற்கு? மேலை நாடுகளில் மாணவ மாணவிகள் மனமுவந்து அம்மணமாக ஓடுவதுதான் புதிய பாஷனாம்! அந்த 'பாஷன்' நம் இலங்கைக்கும் வந்து விடுமென்று அஞ்சுகிறேன்.

—பி—


அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
**ஈஸ்வர் கோப்பரேசன்**
அன்
**றேடியோனிக்**
பிரபல றேடியோ உப-உறுப்பு
இறக்குமதியாளர்களும், விற்பனையாளர்களும்
18, ஸ்ரான்லிறேட், யாழ்ப்பாணம்.
போன்: 7808



எல்லோர்க்கும் எமது அன்பு கலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
**மணியம்ஸ்**
ரெக்ஸ்ரைல்ஸ்
(பிரபல புடவை வியாபாரிகள்)
16, நவீன சந்தை — யாழ்ப்பாணம்.
போன்: 7545




எல்லோருக்கும் எமது அன்பு கலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
பிரகாசமான சலவைக்கு
**லாலா சோப்**
தயாரிப்பாளர்கள்:
லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி.
இன்று பிற்பகல் 3-30 மணிக்கு இலங்கை வானொலியில் எமது விசேஷ நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.



எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
**எச்சரிக்கை**
எமது வாடிக்கையாளர்களுக்கும்
விற்பனையாளர்களுக்கும்
எங்களது லேபலைப்போன்று அச்சிட்ட லேபலும் எமது விலாசமே அச்சிட்ட ரசீதும் கொண்டு எமது பெயரையே சொல்லி மக்களின் பாவனைக்குதவாத பேசப்பொருட்களை விநியோகித்துக் கொண்டு சிலர் திரிகின்றனர். அவர்கள் மீது நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். தயவுசெய்து பொதுமக்களும் எமது வாடிக்கையாளர்களும் மற்றும் வியாபாரிகளும் இதும் எச்சரிக்கையாக இருக்கும்படியும் எமது பொருட்களுக்கு நேரடியாக எம்முடன் தொடர்புகொள்ளும்படியும் மிகவும் பணிவுடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.
**விநாயகம் இன்டஸ்றியல் ஜேக்ஸ்,**
39, மணிக்கூட்டு வீதி — யாழ்ப்பாணம்.



**ரீப்போல்**
இப்பொழுது
கைக்கடக்கமாய் உள்ளது
உபயோகத்திற்கு - இலேசாக அமுக்கி எடுக்கக்கூடிய ஒரு புதிய பக்கெட்டில் கிடைக்கிறது




மற்றொரு தரமான
லங்கெம் தயாரிப்பு



எல்லோருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
**பிரபா போட்டோ**
108, ஸ்ரான்லி றேட், (மக்கள் வங்கி முன்) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் பாதநிழல் நிகரும் இளவேனில்!

## குறுநகை வெண்தளவு அளவின் மணந்துவக்கும் காலம்

வருடங்கள் அயனங்கள் பருவகாலங்கள் இவையெல்லாம் சூரியனது நிலையாலே உண்டாகின்றன. சூரியன் வடக்கு நோக்கிச் செல்லும் காலம் தைமாதம் தொடக்கம் ஆனிமாதம் வரையும் உடைய ஆறுமாதங்களாகும். இந்த ஆறு மாதங்களும் மங்களகரமான கருமங்களைச் செய்வதற்கு மிகவும் சிறந்த காலமாகப் பெரியோர்களால் கருதப்பட்டு வந்துள்ளது. அவற்றுள் ஒன்று சித்திரை மாதமாகும்.

வாரங்களைச் சூரியனுக்குரிய ஞாயிறு முதலாகக் கொள்கிறோம். அதுபோல பன்னிரு இராசிகளையும் மேடம் முதலாக எண்ணுவது பண்டையோர் மரபு. மேடராசி சூரியனுக்கு உச்சவீடாகக் கருதப்படுகிறது. இக்காரணங்களைக் கொண்டு சூரியன் மேடராசியில் வரும் காலத்தை வருடப் பிறப்பாகக் கொண்டாடுகின்றோம்.

சூரியனையே தாம் வழிபடு கடவுளாகக் கண்டனர் முன்னோர். சிவசூரியன் என்று கூறினார்கள் சிவனடியார்கள். சூரிய நாராயணன் என்றனர் நாராயணன் அடியார்கள். "உதிக்கின்ற செங்கதிர்" அம்பாள் உருவம் என்றனர் அம்பாள் அடியார்கள். 'பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு' முருகன் தோற்றம் என்றனர் முருகன் அடியார்கள். இறைவன் அருள் விளக்கு சூரியன் என்றனர் ஞானிகள்.

சூரியன் மேடராசியில் புகும் காலத்தில் மனையில் கோலமிட்டு மாவிலை தூக்கி நிறைகுடம் வைத்து, முற்றத்தில் பொங்கி சூரியனை வரவேற்கிறோம். வருடம் முழுவதும் நல்வாழ்வு தரும்படி இறைவனை வேண்டுகிறோம்.

வருடப்பிறப்பு இளவேனிற் காலத்தின் ஆரம்பமாகும். அதனாலும் வருடப்பிறப்பு சிறந்து விளங்குகிறது. இளவேனிற்காலம் மக்களுக்கு இன்பத்தை அளிக்கும் காலம். ஒரு நற்குருவின் இலக்கணங்களைக் கூறுமிடத்து "வஸந்தவல் லோகஹிதம் சரந்து" (வஸந்த காலத்தைப்போல் உலகத்திற்கு நன்மையைச் செய்பவர்கள்) சிறந்த குருவாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

நாவுக்கரசர் இறைவன் பாத நிழலின் இன்பத்தைக் காட்டும்போது இளவேனிலின் இன்பத்தை ஒப்பிடுகிறார்.

"மாசில் வீணையும்
மாலை மதியமும்
வீசு தென்றலும்
வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை
பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை
இணையடி நீழலே"

வசந்தகாலத்தில் மலர்கள் பூத்துக்குலுங்கும். அந்த மலர்களை இறைவனுக்குச் சூட்டி வசந்தன் விழாக் கொண்டாடுவார்கள். ஆலயங்கள் எங்கும் வசந்தமண்டபத்தை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

மங்கல காரியங்களைச் செய்வதற்கு இந்த வசந்தகாலம் மிகவும் சிறந்தது. வருடப் பிறப்பிற்குப்பின் ஒவ்வொர் நல்ல தொழிலையும் கல்வி, ஏர் மங்களம், வியாபாரம் முதலிய யாவற்றையும் ஒரு நல்ல நாளைப் பார்த்தே ஆரம்பிக்கின்றோம். மல்லிகை, முல்லை முதலிய நறுமலர்கள் மலர்ந்து மணம்வீசத் தொடங்கும் இந்த வசந்தகாலத்திலே திருமணங்கள் அதிகமாக நடைபெறுகின்றன. உலகினைத் துறந்த பெரியோர்க்கு வசந்தகாலம் இறைவன் அருளைத் தெளிவாக்குவதுபோல, உலகவிடயங்களில் ஈடுபட்ட மக்களுக்கு வசந்தகாலம் மகிழ்ச்சியையும் சிற்றின்பத்தையும் கொடுக்கின்றது. மதுரைக் கலம்பகம் என்னும் நூலில் உள்ள ஒரு செய்யுள் இதனைத் தெளிவாக எடுத்துச் சொல்கிறது.

குறுநகைவெண்
டளவனின் மணந்
துவக்குங்காலம்
கொழுநரொடும்
இளமகளிர் மணந்
துவக்குங்காலம்
மறுநறொறு
நின்றெமர்கள் உகுத்
திகழும் காலம்
வரிசிலைகொண்
டுருவிலியு முழுந்
திகழும் காலம்
இறுமிறுமி பெருமதியி
னுகல்படரும்
காலம்
தென்றலிளம்
கன்றுமுயி ருகப்
படரும் காலம்
நிறையிறென்றி
நாணிறென்றி மகன்
றிரியும் காலம்
நேசர்மது நேசர்வரை
அகன்றிரியும்
காலம்".

சங்க இலக்கியங்களிலே வேனிற் காலத்தைப் பற்றியும் அக்காலத்தில் நடக்கும் மகிழ்ச்சி விளையாடல் பற்றியும் சுவைபடக் கூறப்பட்டுள்ளன. கலித்தொகை என்னும் நூலில் திருப்பரங்குன்றில் நடக்கும் வேனில் விளையாட்டைப் பற்றிக் கூறப்படுகிறது.

வேனிற்காலத்தில் நிகழ்ந்த ஓர் நிகழ்ச்சியே "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" எனத் தொடங்கும் குறுந்தொகைச் செய்யுள் பாடப்படுவதற்குக் காரணமாயிற்று. இச் செய்யுளைப் பாடியவர் இறையனார் என்பர்.

கொம்பிலும் குளத்திலும் மலரும் மலர்கள் தம்மை மற்றவர்களுக்குக் கொடுக்க விரும்புவன போலத் தோன்றும். மாமரங்களின் நெருங்கிய கிளைகளெல்லாம் அழகுகொள்ளும்படி தளிர்கள் தோன்றும். அந்தச் சோலையிலே நறுந்தளிர் கோதிக்கூவும் ஆண்குயிலின் ஓசை பெண்குயிலின் மனதை உருக்கும். குயில்கள் ஆனந்தமாய்க் கூவும் வேனிற்காலம் மக்களுக்கு மகிழ்வைக் கொடுக்கும் காலம் மயில்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை. கார்காலத்திற் களிப்பது மயில். கார்காலம் பூமிக்கு மிக அவசியமானாலும் மக்களின் மனத்திற்கு மகிழ்ச்சியைக் கொட்டாது.

எனவே இளவேனிற்காலம் மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் செங்கோல் வேந்தனைப் போன்றதாக விளங்குகின்றது. இதனைப் பரஞ்சோதி முனிவர் ஓர் அழகிய பாங்கினால் விளக்குகின்றார்.

"நாறிய தண்ணந் தேமா
நறுந்தளிர்
கோதிக் கூவி
ஊறிய காமப் பேடை
யுருக்குவ குயில்
மென் சேவல்
வீறிய செங்கோல்
வேந்தன் வெளிப்படத்
தேயங் காவல்
மாறிய வேந்தன்போல
ஒடுங்கிய மயில்கள்
[எல்லாம்"

இளவேனிற் காலத்து வீசுவது தென்றற்காற்று. இதனுள் இக்காற்று இசைந்தருவது தென்றலுடன் உடன்பிறந்த பெருமையுடையது தமிழ். எனவே தமிழும் தென்றல் போல இன்பம் பயப்பது.

"பொங்குதமிழ்ப்
பொதியமலை பிறந்து
பூஞ்சந்தனத்தின்
கொம்பணைந்து குளிர்
சாரலிடை வளர்ந்த
கொழுந்தென்றல்"
என்பது சேக்கிழார் வாக்கு.

புதுவருடத்தில் தமக்கும் பிறர்க்கும் இன்பம் பயப்பவற்றையே நினைந்து, இறைவனைச் சிந்தித்து நல்வாழ்வு வாழ முயற்சிப்போமாக!

வ. குகசர்மா


எல்லோருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

0 கவர்ச்சியான இழை
0 நீடிய பாவிப்பு
0 சொகுசான ஓட்டம்
0 உத்தரவாதமுள்ள வேலைப்பாடு

ஆகியவற்றிற்கு
உங்கள் தேய்ந்துபோன டயர்களை
எம்மிடம் புதுப்பியுங்கள்

நோர்தேண்
இன்டஸ்ரீஸ்
(டயர் நிரப்புபவர்கள்)
8/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7158



எல்லோர்க்கும் எமது அன்பு கலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஆறுமுகம்
நல்லதம்பி
(பிரபல நகை வியாபாரிகள்)
75, கன்னாதிட்டி, (போன்: 664) யாழ்ப்பாணம்.




அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்பு கலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

தேவிகா
பிடவை நிலையம்
19, நவீனசந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

தேவிகா ஆர்ட்
என்டர்பிரைஸ்
கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
போன்: 218



எல்லோருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்து



கண்ணையும் — கருத்தையும்
கவரும்
தங்க—வைர நகைகளை
தெரிவு செய்ய
சிறந்த ஸ்தாபனம்

கே. என். எம்.
மீரான் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி. (போன்: 585) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒன்றுமில்லாமல் 'ஆனந்த'மாயிருப்பதெப்படி?

இன்று பிறக்கும் புத்தாண்டை பஞ்சாங்கங்கள் எல்லாம் 'ஆனந்தவருடம், ஆனந்த வருடம்' என்று புகழ்கின்றன. இந்தப் பஞ்சாங்கங்களின் வாயில் ஒருபிடி சர்க்கரையைப் போட்டு, 'ஹே பஞ்சாங்கங்களே! உங்கள் வாக்கு நல்வாக்காகுக!' என்று வாழ்த்தவேண்டும் போலிருக்கிறது. ஆனால் சர்க்கரைக்கு எங்கே போவது?

'இஞ்சாய்! உங்களை இந்த முண்டி கட்டு மிஞ்சின சக்கரை கொஞ்சம் எடுக்கலாமே?"

"இஞ்சாய்' பத்திரகாளியாக எழுகிறது!

"என்ன? சிற்றுண்டி கட்டு மிஞ்சினதோ? இஞ்சை சிற்றுண்டியும் சுடேல்லை, பேருண்டியும் சுடேல்லை. வெற்றுண்டி தான் மிஞ்சிக்கிடக்குது!"

'இஞ்சாய்'க்கு வாய் நல்லா முற்றிப் போய்விட்டது. முற்றிப்பழுத்தும் விட்டது. உண்டியின் உறைவிடமாகிய வயிறு வெறுமனே கிடக்கிறது என்பதை 'வெற்றுண்டி' என்று இலக்கியச்சுவையோடு சொல்லுகிறாள்! இந்தளவைய கட்டத்தட்டாவிட்டால் அளவுக்கு மிஞ்சி ஆத்திரத்தை உண்டு பண்ணிவிடும். வாதையப் பொறுத்தவரையில் - உண்பதிலும் சரி, பேசுவதிலும் சரி- ஆண்மகன் ஒருபோதும் பெண்மகளுக்குத் தோல்வி போகமாட்டான் என்பதை இச்சணமே நிரூபிக்காவிட்டால் நான் ஆண்மகன் அல்ல!

"ஹே! பெண்ணே! உனது மடமையைப் பிரசித்தப்படுத்தாதே! "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்று ஒரு பெண் புலவரே பாடியிருப்பதை நீ அறியாயோ?"

'சோம்பர் என்பவர் தேம்பித்திரிவர்' என்று உறுத்தான் விட்டது 'இஞ்சாய்!'

"பெண்டிர்க்கழகு எதிர் பேசாதிருத்தல்" என்று "வெற்றிவேற்கை" கூறுவதை நீ அறியாயோ?

என்றதும் "இஞ்சாய்" அடங்கிவிட்டது.

கொஞ்சநேரம் செல்ல மனம் இளகத்தொடங்கியது. புதுவருடம் பலகாரம் சுடுவதற்கு போதிய உபகரணங்கள் இங்கில்லையே என்று நொந்து வேகும்



பெண் இதயங்கள் மீதுஎனக்கு இரக்கம் பிறந்தது.

"கண்ணே! இஞ்சாய்! சக்கரைக்கு ஏனெண்ணை இப்பிடித் தட்டுப்பாடு வந்ததாம்?"

"உலகச்சந்தையில் சீனி விலை உயர்ந்துவிட்டுதாம். அதாலை சக்கரை விலையும் கூடிவிட்டுதாம். வெளியூர்ச் சக்கரை வரத்தில்லை. உள்ளூர்ச் சக்கரை விளைவு காணாது.

"இஞ்சாய்" எனக்கு பொருளாதாரம் புகட்டியது.

"சக்கரை இருந்தால் மட்டும் போதுமோ? அரிசி இல்லை, மா இல்லை, உழுந்தில்லை, பருப்பில்லை, ரவையில்லை, சீனி இல்லை, மிளகாய் இல்லை, தேங்காய் இல்லை, தேங்காயெண்ணெய் இல்லை. புளியங் கொட்டைதான் கிடக்குது!

"அருமையான சாமான்! அதை வறுத்தும் நனைத்தும் இடித்து, துவைத்து உண்டால் சகலவிதமான ரோகங்களும் அகலுமென்று சித்திவிநாயகர் சிந்தாமணி'யில் கூறப்பட்டிருக்கிறது. எனவே அதைப் புசிக்கலாமல்லவா?'

"புளியங்கொட்டையை மட்டும் புசித்துக் கொண்டிருக்க முடியுமா, கவிநாயகமே?"

"காரை, பிரண்டை, முல்லை, முசுட்டை, சண்டி, அகத்தி, தொய்யில், தயிர்வலை, பசளி, புளிக்கீரை, கங்குன், பனங்கீரை இப்படியான நூற்றுக்கணக்கான கீரைவகைகளிலும் இலைகளிலும் விட்டமின் ஏ முதல் ஸக்வரையுள்ள எல்லா

ரீ.என்.பீ

விட்டமின்களும் இருக்கின்றன என்று மேற்படி "சிந்தாமணி" மேலும் வற்புறுத்துகிறது.

"அறுகம்புல், கோழிச்சூடன், கொடைச்சி, இக்கிரி, முடிதும்பை, காஞ்சுரோண்டி எல்லாம் உடம்புக்கு நல்லதுதானென்று "போக முனிபாக சாஸ்திரம்" கூறுகிறது. போய் ஒரு கடகம் காஞ்சுரோண்டி பிடுங்கிக் கொண்டுவந்தால் அவிச்சுக் குடிக்கலாம்."

"கண்ணே! இல்லைத்த மகமாயீ! கவலைப்படாதே! இது ஆண்டவனுடைய திருவிளையாடல் போலும்! ஒன்றுமில்லாமல்-அதாவது நிர்வாண மாயல்ல-சாப்பாடு சங்கதிகளைப் பற்றிய கவலை ஒன்றுமில்லாமல்-சும்மா இருக்கும் கலையை அவன் எங்களுக்குக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கிறான். இக்கலையை நாம் பூரணமாகக் கற்றுக்கொண்டு விட்டால், பசி ஏது, பாண் ஏது, மாவேது, சீனியேது?"

"அப்பிடி சும்மா இருக்கமுடியுமே?'

"ஆ, அப்பிடிக்கேள், 'சும்மா இருக்கின்ற திறமரிது' என்று சொல்லிப்போந்தார் தாயுமானவரும். சும்மா இருக்கவேண்டுமென்றால் "கனியேனும் வறிய செங்காயேனும் உதிர் சருகேனும் கசிந்தவளவிவேனும், அனல் வாதை வந்தெய்தின் எள்ளிப் புசித்துக் கொண்டிருக்க தெண்டுபிக்கவேண்டும். எவ்வளவு நல்லதோர் பாடம், பார்த்தாயா?,

"அப்பிடி இருந்திட்டால் ஆனந்தம் வருமோமோ?'

"நீ நினைக்கிற இவ்வுலகத்தைப லௌகிக இம்மை ஆனந்தமல்ல. மறுமையிலே கிடைக்கும் பேரானந்தம்?'

'உந்த மறுமைகிறுமையை விட்டிட்டு, இந்த வருஷத்திலை

(10-ம் பக்கம் பார்க்க)

இன்று உயிர்த்த ஞாயிறு



## சாவை வென்ற சத்தியன்

—நீ. மரியசேவியர்—

பூமி அதிர்ந்தது
புவலும் அசைந்தது
புதுமையும் ஒன்று புலர்ந்தது
விண்ணொளி மின்னிட
கண்ணினை பின்னிட
கல்லறைக் கல்லுமோ சரிந்தது.
உத்தம நாதன் உயிர்த்தார் இன்று
சத்திய மூர்த்தி உயிர்த்தார் நன்று
நித்திய இறீ்ந்து உயிர்த்தார் என்றே
சங்கே முழங்கு
வெற்றிச் சங்கே முழங்கு!


எல்லோருக்கும் எமது அன்புகலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

ராஜபவன்

ஜவுளி மாளிகை
(மிகக் குறுகிய காலத்தில் மக்களின்
அமோக ஆதரவு பெற்ற ஜவுளி மாளிகை)
பெரியகடை (போன்: 378) யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில்
'யுனிக்' றேடியோ விநியோகஸ்தர்களான
V.K. இராசரத்தினம் ஸ்தாபனத்தார்
தமது ஆதரவாளர்கள், பாவனையாளர்கள்
அனைவருக்கும் தமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவிக்கின்றனர்.

V.K. இராசரத்தினம்
(பிரபல
றேடியோ விற்பனையாளர்களும், திருத்துபவர்களும்)
95, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்.
போன்: 7447

எல்லோருக்கும் எமது நன்றிகலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

★ பால்மா வகைகள்
★ மருந்து வகைகள்
★ சாய்ப்புச் சாமான் வகைகள்
★ பட்டர் மார்ஜரின் வகைகள்
★ சூட்கேஸ் வகைகள்
★ பிளாஸ்டிக் சாமான் வகைகள்
★ கோப்பை-பீங்கான் வகைகள்

(இலங்கை மட்பாண்ட கூட்டுஸ்தாபனம்)
பரிசுப் பொருட்களும் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

வீரவாகு அன் கோ.,



1, புதிய மத்திய சந்தை — யாழ்ப்பாணம்.
போன்: 7427 (ஆஸ்பத்திரி வீதி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைக் கொழுந்து

—வல்வை. ந. அனந்தராஜ்—

"....என்னுபொண்ணு நீ! மழை உழுந்திட்டிருக்குத் தெரியலே? எம்புட்டுத்தூரம்நீ போவணும்? நின்னுக்கோ. அப்புறமா போகலாம்...."

"....என்னேயா ஒனக்கு அறிவிருக்கா? தனியா உள்ள பொண்ணுகிட்டே இப்படியா நடந்துக்குவாங்க...."

"டேய் விடுடா!..." எவ்வூட்டு ரொட்டியை ஏண்டா எடுத்துட்டே? கொடுடா எங்கிட்டே".

"உக்கும்... நான் மாட்டேன் போ, போ...இது எவ்வூட்டிரொட்டி தான். நா ஏன் தரணும்? ஒவ்வூட்டு ரொட்டியைத்தான நீ துன்னுட்டியே. அப்புறம் எங்கிட்ட ரொட்டி கேக்கிறியா?"

ஒரு துண்டு ரொட்டியை வைத்துக்கொண்டு அந்த இரு சகோதரர்களும் வாக்குவாதம் செய்துகொண்டிருந்தனர். இது போன்ற உணவுச் சண்டைகள் சாதாரணமாக மலையகத்தில் உள்ள ஒவ்வொரு லயத்தின் மூலைமுடுக்குகளிலும் காணலாம்.

பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பார்கள். ஆம்! ... வறுமையின் கோரப்பிடியில் சிக்கித்துவழும் அந்த இரு இளம் உள்ளங்களிலும் அண்ணன், தம்பி பாசத்தை எதிர்பார்க்க முடியுமா? சின்னவன் எதிர்பார்க்காதவகையில் அவனிடம் இருந்து ரொட்டித் துண்டைப் பெரியவன் தட்டிப்பறிக்க முனைந்தான். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காது கட்டிப் பிடித்து உருண்டு புரண்டனர்.

"பளார்! ... பளார்!" -திடீரென்று ஏற்பட்ட ஓசை சின்னவனைத் திடுக்கிடவைத்தது. அந்த ஒரு விநாடியில் காம்பரா முழுதும் ஒரே நிசப்தம் நிலவியது. ஒட்டிய வயிறும், உலர்ந்த கண்களுமாய், முதுகிலே கொழுந்தெடுக்கும் கூடையுடன் வந்த மாரியம்மா. அதே வேகத்தில் மீண்டும் பெரியவன் முதுகில் நாலு பொடு போட்டாள்.

"அடேய்!... சோமாறிப்பயலுவளே!...உங்களுக்கு அறிவிருக்காடா? அங்கே ஊட்டுக்குள்ளே கொழந்தை தூங்கிட்டு இருக்கிது. நாலுநாளா அதுவவுத்துக்குஒண்ணுமில்லாம அழுதுக்கிட்டே இருக்கிது. ஒங்களுக்கென்னுன்னு பெரிய திமிரு புடிச்சிகிக்கு".

அளவுக்கு மீறிய ஆத்திரத்தில் தன்னுடைய பிள்ளைகள் என்று கூடப் பாராது பொரிந்து தள்ளிக் கொண்டே இருந்தாள். காலையில் ஒரு துண்டு ரொட்டியை இருவருக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, அவள் மட்டும் வெறும் தேநீருடன் மட்டும் வயிற்றைக் கழுவிக்கொண்டாள்.

மாரியம்மா தினமும் அதிகாலையிலேயே எழுந்து வீட்டுவேலைகள் எல்லாம் முடித்தபின் கூடையுடன் மலைக்குப் புறப்பட்டுவிடுவாள். அன்றும் வழக்கம் போலவே, தன் வேலைகளை முடித்துக்கொண்டு, பிள்ளைகளுக்கும் பசி ஆற என்று ஏதோ கொடுத்துவிட்டு வேலைக்குப் புறப்பட்டபொழுதே, இப்படி ஒரு பிரச்னைக்கு முகம் கொடுத்தாள்.

அந்தப் பெரிய தேயிலைத்தோட்டத்தில் வேலைசெய்யும் தொழிலாளிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள லயத்தில்தான் மாரியம்மாவும் இருக்கின்றாள். ஒரு அறைகளையும் அதனுடன் இணைந்துள்ள ஒரு சிறியகாம்பராவுமே அவளுக்கெனக் கொடுக்கப்பட்டது. அந்தக் காம்பராவில் அவளுடன் சேர்ந்து அவளுடையமூன்று பிள்ளைகளும், நோய்வாய்ப்பட்டு இன்றோ, நாளையோ என இருக்கும் வயதான தாயுமாக ஐந்து ஜீவன்கள் இருக்கின்றன.

அந்த லயத்திற்குப் புதிதாக யாராவது சென்றால் மூக்கைப்பிடித்துக்கொண்டுதான் ஓடுவார்கள். குப்பைகளும், கூழங்களும், சாக்கடை நீருமாக ஒரேமுடை நாற்றமடிக்கும் அந்த லயம்தான் தோட்டத்தொழிலாளரின் சொர்க்க லோகம்!

அவளுடைய காம்பராவில் மழைத்தூறல் அடித்தால்கூடச் சட்டி, பானைகளைத்தேடி எடுத்துக்கொண்டு வந்து, அறை முழுவதும் அடுக்க வேண்டியதுதான். அந்த அளவுக்கு அது பொத்தல்கூரையாக இருந்தது. இந்த லட்சணத்தில், அவளுடைய நாள்சம்பளம் மூன்றுருபா. அதிலும் எத்தனையோ வெட்டுக்கள், கொத்துக்கள்.

மாரியம்மாவின் சொந்த வாழ்க்கையை அறிந்தவர்கள், அவளுக்காக இரண்டுதுளி கண்ணீராவதுசிந்தாது விடமாட்டார்கள். அந்த அளவுக்கு அவள் வாழ்க்கையைத் துன்பப்படலம் சூழ்ந்திருந்தது.

தமிழ்நாட்டில் உள்ள தஞ்சாவூர்க் கிராமத்தில், செல்வச் செழிப்போடு வாழ்ந்த அண்ணாமலைச்செட்டியாரின் ஒரே மகளாகப் பிறந்த மாரியம்மா, பசியென்றால் என்ன என்றே தெரியாது வளர்ந்து வந்தாள். அண்ணாமலை நடத்தி வந்த தொழிலில், எதிர்பாராதவிதமாகப் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. தொழில் நீட்டிநிமிர்ந்து படுத்துவிட்டது. இதே கவலை அவரை நோய்வாய்ப்பட வைத்து, மரணத்தின் மடிக்கே அழைத்தது.

நடுத்தெருவில் விடப்பட்ட சிறுமி மாரியம்மாவும், அவள் தாயும் வாழ வழியற்று என்ன செய்வதென்றே தெரியாது தவித்தார்கள். தூரத்துப்பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி என்று சொல்வார்கள். அதேபோல் தமிழ்நாட்டில் இருந்தும் தொழில்தேடி ஈழம் நோக்கிப் புறப்பட்டவர்களுடன் அவர்களும் புறப்பட்டனர். அன்று கடலில் புறப்பட்டபொழுது அவர்களுக்கென்று இருந்த ஒரே சொத்து, ஒரு சிறிய துணிமூடை.

ஓடும் கடிகாரத்தை நிறுத்தலாம், ஆனால் கால ஓட்டத்தின் வேகத்தை நிறுத்த முடியுமா? மாரியம்மாவின் வயது ஏற, ஏற அவள் அழகும் ஒருபடி உயர்ந்துகொண்டே வந்தது. பருவ எழில் அவள் அங்கமெங்கும் மின்னிக்கொண்டிருந்தது. மாரியம்மாவுக்குப் பதினெட்டுவயதாக இருக்கும்பொழுதே, தூரத்து உறவினரான சிதம்பரத்தின் கைகளில் அவளைக் கொடுத்துத் தன் கடமையை முடித்துக் கொண்டாள் அந்தத்தாய்.

தெளிந்த நீரோடையில் ஓடும் ஓடம்போன்று, அவர்களுடைய குடும்பவாழ்க்கை எவ்வித சலனமுமின்றி ஓடிக்கொண்டிருந்தது. அவர்களுடைய தாம்பத்திய வாழ்வின் சின்னமாக மூன்று ஆண்குழந்தைகள் அடுத்தடுத்துப்பிறந்தன.

ஒருநாள் தொழிற்சாலையில் சிதம்பரம் வேலைசெய்துகொண்டிருக்கும் பொழுது திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் அவன் உடலும் வெந்து கருகிச் சாம்பலானது. கடைசியில் கணவன் முகத்தையே பார்க்கமுடியாதவாறு விதி அவள் வாழ்க்கையில் கோரத்தாண்டவம் ஆடிவிட்டது. இந்த இளமையிலேயே இப்படி ஒரு நிலை ஏற்படும் என்று அவள் கண்டாளா?

புலிகள் நிறைந்துவாழும் கொடுங்காட்டில் புள்ளிமான்களால் எவ்வளவு காலம்தான் அமைதியுடன் வாழ்க்கை நடத்த முடியும்? எப்படியோ சமூகத்தின் கழுகுக்கண்களில் இருந்தும் தப்பித் தன் மூன்று குழந்தைகளுடனும், தாயுடனும் அந்தக் காம்பராவில் அவள் நீறுபூத்த நெருப்பாகவே வாழ்ந்து வந்தாள்.

ஃ

ரொட்டிக்காகச் சண்டை போட்ட பிள்ளைகளை ஒருவாறு அடக்கிவிட்டு வழக்கம்போல் தாயிடமும் சொல்லிக்கொண்டு வேலைக்குப் புறப்பட்டாள்.

"மாரியம்மா!... நின்னுக்கோ நானும் வந்துட்டேன்."

அவள் காம்பராவை விட்டுச் சிறிது தூரம் தான் போயிருப்பாள். அதற்குள் பக்கத்துக் காம்பராவில் உள்ள பச்சையம்மாவின் குரல்கேட்டுத் திரும்பிநின்றாள்.

"ஆ...ஆ...சிக்கிரம் வந்துக்கோ நேரமாச்சுது" என்று அவளைத் துரிதப்படுத்திக்கொண்டே மடியில்சுற்றி வைத்த வெற்றிலை முடிச்சை அவிழ்த்து ஒருவாய் போட்டாள். சிலநிமிடங்களில் பச்சையம்மாவும் தேயிலை கொய்வதற்கு ஆயத்தமாகக் கூடையுடன் புறப்பட்டாள். இருவரும் லயத்துப்பக்கத்தில் இருந்து இறங்கித் தெருவோரம் நடந்து சென்றார்கள். வழியில் இருவரும் ஒருவரோடொருவர் எதுவும் பேசிக்கொள்ளாமலேயே நடந்துசென்றனர்.



"என்னடி மாரியம்மா? ஒரு மாதிரி மூஞ்சியை வைச்சிருக்கே. ஏண்டி, என்ன நடந்திச்சுது?" -பச்சையம்மாவே நீண்டநேர மௌனத்தைக் கலைத்துப்பேச்சைத் தொடக்கினாள்.

"ஒண்ணுமில்லே பச்சே!...தலைவலி வந்திடிச்சு, அய்த்தான் ஒரு மாதிரி இருக்கு."

-பதிலுக்கு அவளும்ஏதோ சொல்லிவைத்தாள் அவளும் இதை நம்பியவளாக மேலும், தொடர்ந்து எதுவும்கேட்காது அவளுடன்சேர்ந்து நடந்தாள்.

இருவரும் நடந்து சென்று கீழ்ப்பாதையில் உள்ள மலைக்கு இறங்கினர். கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்து பெய்த மழையினால் அப்பகுதியில் உள்ள கொழுந்துகள் பச்சைப் பசேலென்று செழித்துக் காணப்பட்டன. இருவரும் நேரே கங்காணியிடம் சென்று பெயர் கொடுத்துவிட்டுக் கொழுந்தெடுக்க இறங்கினார்கள்.

மாரியம்மாளின் கைகள் கொழுந்துகளைக் கிள்ளுவதிலேயே சென்றன. அவள்எண்ணம்முழுதும், அவளுடைய பிள்ளைகளைச்சுற்றியும், வறுமைநிலை பற்றியுமே வட்டமிட்டது. ஆம்!... அந்த இளம் கொழுந்துகள் எவ்வளவு செழிப்பாக இருக்கின்றன.

"சே!... இப்பிடி எத்தின்னு ளைக்குத் தான் இருக்கிறது? எம்புள்ளைங்க வவுத்துப் பசிக்குச்சோறு திங்கக்கொடுக்க முடியலே. எப்பிடித்தான் அதுகளை வளர்த்து ஆளாக்கு வேனோ?"

—நெடுநேரம் தன் அவலநிலையையே எண்ணிச் சிந்தித்துக்கொண்டிருந்த மாரியம்மாக்கு 'ஓவென்று' அலறவேண்டும்போல் இருந்தது. அவள் கூடையில் கொழுந்து நிறைந்ததாகத் தெரியவில்லை மாறாக அவள் இதயத்திலோ துன்பச்சுமை

(10-ம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

தரமான ஐஸ்கிறீம் வகைகள் சுவையான குளிர்பானங்கள்

ஸ்பெசல்

ஃ சொக்லேட் கிறீப்ஸ் ஃ ஸைடர்
ஃ ஸ்ரோபறி கிறீம் ஃ மில்க் சேக்

ஐஸ்பழம் - ஐஸ்சொக்

மற்றும்

விழாக்கள், களியாட்டங்கள் அனைத்திற்கும் தேவையானவற்றைக் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ள

ராஜா கிறீம் ஹவுஸ்

36, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கல்யாணச் சந்தடியில் தாலி கட்ட மறந்தாலும்" என்பது தமிழில் உள்ள பழமொழிகளில் ஒன்று. யாழ்ப்பாணத்தில் இவ்வருடம் ஜனவரி 3-ம் தேதி தொடக்கம் 9-ம் தேதி வரை நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சிமாநாடு பற்றியும் அந்த மாநாட்டையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட கலை கலாசார நிகழ்ச்சிகள் பற்றியும் விரிவாக விமரிசனம் செய்வதற்கு நாம் உத்தேசித்திருந்தோமாயினும் கடைசிநாள் நிகழ்ச்சியின் போது இருவர் பலியானதும் அடுத்தநாள் பத்தாம் தேதி அன்று அநியாயமாக ஏழு பேர் உயிர்ப்பலி கொடுத்ததுமான துன்பியல் சம்பவங்களைத் தொடர்ந்தும் இச்சம்பவங்களை அடுத்து நடைபெற்ற விசாரணைகள் காரணமாகவும் இந்த விமரிசனங்களை ஒத்திவைத்திருந்தோம். ஆனாலும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இந்தநிகழ்ச்சிகளை மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டியது எமது கடமையாதலால் தமிழாராய்ச்சி மாநாட்டுக் கலை நிகழ்சிகள் பற்றிய விமரிசனத்தை இங்கு தருகிறோம்.

(ஆ-ர்)

# மாநாட்டுச் சதங்கை ஒலி

நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் வரலாற்று முக்கியத்துவத்துடன் முடிவடைந்திருக்கிறது.

மொழிபற்றிய பல்வேறு ஆய்வுகளைப் பல்வேறு நாட்டு அறிஞர்கள் ஆய்ந்திருக்கிறார்கள்— முன்னைய மாநாடுகளைவிட உயர்ந்த தரமுடைய கட்டுரைகள் இங்கு சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டிருக்கின்றன.

சென்னை மாநாட்டையும் விஞ்சிவிட்டதென்று இந்தியாவிலிருந்து வந்த அறிஞர்கள், பார்வையாளர்கள் கூறுகிறார்கள்.

—இத்தகைய பெருமையும், முக்கியத்துவமும் எழுச்சியும்வாய்ந்த இந்த மாநாட்டின் துணை அங்கங்களாக கண்காட்சிகள் வைக்கப்பட்டன; சுற்றுலாக்கள் நடைபெற்றன; அலங்கார ஊர்திகள் பவனிவந்தன; அத்தோடு கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

ஈழத்துத் தமிழ்பேசும் மக்களின் கலைவளத்தை வெளிநாட்டுப் பேரறிஞர்களும், பார்வையாளர்களும், ஈழத்து மக்களும் கண்டுகளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கலை நிகழ்சிகளில், இத்தகையில் நாம் எதிர்பார்த்த - எதிர்பார்க்கக்கூடிய -எதிர்பார்க்கவேண்டிய கலைஞர்களை ஏனோ காணமுடியாதுபோனதும் ஏழுதினங்களும் வீரசிங்கம் மண்டபம், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபம், யாழ். திறந்தவெளி அரங்கு ஆகிய மூன்று இடங்களில்— மாநாட்டு அமைப்பின்கீழ் நடனம், நாடகம், இன்னிசை, மெல்லிசை என்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

—இவற்றில் தொன்மையும், கலையுயர்வும் கொண்டு, இறையுணர்ச்சியுடன் ஒன்றி வளர்ந்து, உலக மதிப்பைப்பெற்ற நம் நடனக்கலையில், நம்மவர்களின் தேர்ச்சியை- திறமையை இந்த அரங்குகளில் கண்டுகளிக்கலாம் — பெருமைப்படலாம் - நல்ல வாய்ப்பு என்ற எண்ணத்தோடு, நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த அரங்குகளுக்கு மாறி மாறி அலைந்தேன்.

என் எண்ணம் வீண் போகவில்லை! ஆனால் ஏமாற்றமும் இருந்தது.

—பிரமிக்கச்செய்து, பெருமைப்படவைத்த நிகழ்ச்சியைக்காண முடிந்தது! அற்புதமான- அருமையான நிகழ்ச்சிகளைக்காண முடிந்தது! - அழகான - மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளைக்காண முடிந்தது. அவைமட்டுமன்றி, "ரெலிவிஷன்" நிகழ்ச்சிகள்; "றெடிமேட்" நிகழ்ச்சிகள்; "இமிரேஷன்" நிகழ்ச்சிகள் போன்ற விந்தையான நிகழ்ச்சிகளையும் காண- களிக்கமுடிந்தது. இவை, நாம் உணர்ந்துகொள்ள வேண்டிய- உணர்த்தவேண்டிய பலவற்றையும் கூடவே உணர்த்தியிருக்கின்றன- சில அநுபவங்களையும் தந்திருக்கின்றன. அவற்றை விமர்சனங்களோடு தொடர்ந்து காண்போம்.

முதலாம்நாள் நிகழ்ச்சிகளின் போது சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அளித்த "அஞ்சலி" என்ற தொகுப்பு நிகழ்ச்சி வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. மணிப்புரி, கதக், பரதம், கும்மி ஆகிய நடனங்கள் இதில் இடம்பெற்றது. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அளிக்கும் நிகழ்ச்சி என்றதும் சற்று ஆவலாக அவதானித்தேன். வேறொன்றுக்காகவுமன்று, நல்ல நிகழ்ச்சியாக இருக்குமென்றுதான்!

மேற்கத்திய கலை-கலாச்சாரங்களினூடு, கத்தோலிக்கமதக் கோட்பாட்டிலும் அமைந்த இக்கல்லூரி அண்மைக்காலத்தில் தமிழ் கலை, கலாச்சாரங்களில் போற்றத் தகுந்த பலவற்றை ஆற்றிவருகிறது. பல நாட்டிய நாடகங்களை பிரமாதமாகத் தயாரித்து பாராட்டுப்பெற்ற இவர்கள், கல்லூரி வைபவங்களிலும் நல்ல நடன நிகழ்ச்சிகளை அளிக்கிறார்கள். மாநாட்டிலும் நிகழ்ச்சி அளித்த ஒரே ஒரு கல்லூரி இதுதான்! இவர்களிடமுள்ள இன்னொரு சிறப்பு, மிருதங்கம் தவிர ஏனைய பின்னணி இசைக்கலைஞர்கள் அனைவரும் கல்லூரியினரே. நடன ஆசிரியர் ஒருவரையும் வைத்திருக்கிறார்கள். எனவதான் ஆவலோடு அவதானித்தேன்.

மணிப்புரி, கதக் ஆகியன வட இந்திய நடனங்கள். கதக் துரிதகதி உடையது. மணிப்புரி தனியான உடை அமைப்பும், கை-கால் அசைவுகளும் கொண்டது. நுனிக்காலில் அசைந்து, சுழன்றுருவது இதன் தனிச்சிறப்பு. நாம் பார்த்த சில மணிப்புரி நடனங்கள்போல் இவர்களின் நடனம் இருக்கவில்லை, உடையும் மாறுபட்டிருந்தது. மொகலாயர் காலத்தில் பிரபலமடைந்த நடனங்கள் இவையாதலால் அம்மாதிரியான உடைகளையே அணிவித்திருக்கலாம்.

பரதத்தின் சிறப்புக்களை விளக்குவதாக அமைந்த பதம் சற்று நீளமாக இருந்தது. தமிழன்னைக்கு மங்கள ஆரத்தி எடுப்பதாக அமைந்தது கும்மி. ஒப்பனை, உடைகள், எடுப்பாக இருக்கவில்லை.

நிகழ்ச்சிக்கு கல்லூரி நடன ஆசிரியை செல்வி சாந்தா பொன்னுத்துரை நட்டுவாங்கம் செய்ய திருமதி நா. பொன்னையா, செல்வி அ. தியாகராசா ஆகியோர் பாடினார்கள். திருமதி ஜே. ஆனந்தநாயகம் வீணைவாசிக்க திரு. அம்பலவாணர் மிருதங்கம் வாசித்தார்.

ஆ, இவர்களை புரொபெஷனலாக விமர்சிக்கவில்லையென்னும் மொத்தத்தில் அஞ்சலி நெஞ்சை அள்ளும்படி வழக்கம்போல் "ஓகோ" என்று இருக்கவில்லை.

(தொடரும்)

—மாலி

## தலைவன் என்பவன் யார்?

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

சர்ச்சிலின் வீரம் அவரது நாவன்மையன்றோ.

நாவன்மையினால், தொழிலாளி தொழிற்சங்கத் தலைவனாக முடியும். மாணவன், மாணவ மன்றத் தலைவனாக முடியும். விவசாயி விவசாய ஆலோசனைக் குழுவின் தலைவனாக முடியும். முதலாளி, முதலாளிமார் சம்மேளனத் தலைவனாக முடியும்.

ஆபத்துக்களுக்கு அஞ்சாதவன் வீரன். அவைக்களத்துக்கு அஞ்சுபவன் கோழை. அவைக்களத்தில் தனக்குத் தெரிந்தவற்றை மற்றோர் விளங்கும் வண்ணம் அஞ்சாமல் எடுத்துரைப்பவன் மகாவீரன். அவைக்களத்தில் தனக்குத் தெரிந்தவற்றை எடுத்துரைக்க அஞ்சிப் பேசாமடந்தையாக இருப்பவன் கோழைகளுக்குள் ஓர் கோழையாவான். அவன் இவ்வுலகில் வாழ்ந்தாலும், இறந்தாலும் ஒன்றுதான் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். ஆங்கில நாடக ஆசிரியரான ஷேக்ஸ்பியரும் கோழைகள் தமது மறைவுக்குமுன் பலதடவை இறந்துபோய்விடும் தன்மை வாய்ந்தவர்கள் என்று கூறியுள்ளார்.

### தனித்தன்மை

ஆங்கிலத்தில் "பர்சனுலிட்டி" என்று கூறப்படும் வார்த்தையைத்தமிழில் தனித்தன்மை என்றோ அல்லது ஆளுமை என்றோ கூறலாம். தனித்தன்மை பற்றி ஆரம்பவுரையில் என்ற தலைப்பில் விரிவாக ஆராய்வோம்.

ஒவ்வொரு மானிடனும் தனக்கே உரித்தான ஏதேனும் ஒரு விசிட்ட சிறப்புத் தன்மையுடன் —தனித் தன்மையுடன் செயல்படுகிறான். சிலரிடம் மற்றோரைக்கவரக்கூடிய வசீகரமும் இருக்கக்கூடும். சிலரிடம் அழகான உடலமைப்பு இனிமையான குரல், மோகனம் புன்னகை சிந்திடும் முகவெட்டு வசீகரநடை முதலியவை இருக்கக்கூடும்.

இவைமட்டும் ஒருவனுடைய தனித்தன்மையாக மாட்டா. "வசீகரமன்னன்" என்று கூறப்படும் நேருஜி தனது நாவன்மை, எழுத்து வல்லமை, இளமை வசீகரம் முதலிய தனித்தன்மைகளால் மற்றோரைக் கவர்ந்தார். ஆனால் மகாத்மாகாந்தியை "வசீகர மன்னன்" என்று கூறிவிட முடியுமா?

மகாத்மாகாந்திஜியிடம்காணப்பட்ட அன்பு, அஹிம்சை, தூயஉள்ளம், உண்மைபேசுதல், நேர்மை, வாய்மை, இறைவழிபாடு ஆகியவை அவரிடம் கோயில்கொண்டுள்ள தனித்தன்மையன்றோ. ஆதலினாலன்றோ "காந்தருள் மாணிக்கம்" என்று அவரை உலகம் போற்றிற்று.

ஆகவே அழகிய உடலமைப்புடன் திகழ்பவர்களிடம் மட்டுமே தனித்தன்மை குடிகொண்டிருக்கிறது என்று கூற முடியாது. உருவத்திலும் அழகிலும் குன்றிய நெப்போலியன் தனது குன்றாத உறுதியினாலும் குறையாத வீரத்தினாலும் உலகைக் கவரவில்லையா?

எவ்வெவ்வகையான தனித்தன்மையில் நீங்கள் முன்னிற்கிறீர்களோ அவ்வவ் தனித்தன்மையினை நீங்கள் வளர்த்திடல் வேண்டும். இல்லாத தொன்றிற்காக எண்ணி எண்ணி ஏங்குதலைவிட இருப்பதொன்றினை எண்ணிப் பெருமை கொண்டு அத்தனித்தன்மையை மேலும் செழிப்புற வளர்த்திடுதல் சாலச் சிறந்தது.

(வளரும்)

## பெண்கள்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வோருக்கு நிதானபுத்தி வேண்டும். வனிதையர்கள் இவ்வாண்டில் தனிவழிப்பயணம் தவிர்ப்பது நன்று.

மகரம்:

விவசாயிகளுக்கு வெற்றி தனச்சிறப்பு, தனவிய வரவு, வாகனசுகம், வரவில் திருப்தி, கேவிடத்துஆதரவு, நீண்டநாள் விவாகமாகாதவர்களுக்கு விவாகம் நடக்கும். குடும்ப வாழ்க்கையில் குதூகலம், காதலர் வாழ்வில் கனிவான சம்பவம், ஊழியர்களுக்கு உயர்வு, கல்விபயில்வோருக்குசித்தியும், கைத்தொழில் புரிவோருக்கு சிறப்பும், கலைஞர்களுக்கு மதிப்பும், வணிகர்களுக்கு வருவாயில் உயர்வும் உண்டு.

கும்பம்:

பிறர் நம்பிக்கை பேரிழப்பைக் கொடுக்கும். நண்பர்கள் ஆனாலும் நம்பக்கூடாது. குடும்பத்தில் குதூகலமிராது. இனப்பகையும் இராசகலையும் உண்டாகும். பொறுமைவேண்டும், கன்னிப்பெண்கள் கண்காணிப்புடன் நடந்துகொள்ள வேண்டும். ஊழியர்கள் மந்தநிலையை அடைவர். பூமியால் பிணக்குத்தலை தூக்கும். சுகாதாரம்வேண்டும்.

மீனம்

தொழிலில் தொல்லைகள், விவசாயிகளுக்கு சோதனை, பகைமையால் பணவிரயம், தானியநஷ்டம், தனக்குறைவு, பொருள்மாற்று விரும்பத்தக்கது. அல்லது, நம்பிநடத்தல் கூடாது. ஊழியத்தில் தவறு ஏற்பட இடமுண்டு. சிறுபிள்ளைகளுக்கு சிரங்கொடு தொற்றுநோய் உண்டு. குடும்பத்தில் பொறுமை வேண்டும். அதிககோபம்வரும் கன்னியர் இவ்வாண்டில் ஆடவரைநம்பி நடக்கக்கூடாது. ஏமாற்றம் [illegible] முதலீட்டுத் தொழில் [illegible]

எல்லோருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

அஜந்தாஸ்
இடமாற்ற அறிவித்தல்

யாழ்ப்பாணம் 162, காங்கேசன்துறை வீதியிலிருந்த எமது ஸ்தாபனம் '54, பெரியகடை யாழ்ப்பாணம்' என்ற விலாசத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இப்புனித நாளில் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அஜந்தாஸ்
பிடவை மாளிகை
54, பெரியகடை — யாழ்ப்பாணம்

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்து
நம்பிக்கையான
நவநாகரிக தங்க நகைகள் வேண்டுமா !!
இன்றே வருகை தருங்கள்
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199 தந்தி: வைரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது அன்புகலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
ஹரன்
ஜுவல்லர்ஸ்
(பிரபல நகை வியாபாரிகள்)
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# ஈழநாடு
# ஆனந்த வருட பஞ்சாங்கம்

அனைவருக்கும் எமது அன்புகலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
உங்கள் ஜவுளித் தேவைகளை
பூர்த்தி செய்துகொள்ள மறவாதீர்!
கணேசானந்தாஸ்
சில்க் பலெஸ்
15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

## குருபூஜை தினங்கள்


சித். 5 (18-4-74) திருநாவுக்கரசர், இலக்கணசுவாமி
வை. 23 (6-6-74) திருஞானசம்பந்தர்
ஆனி 10 (24-6-74) மாணிக்கவாசகர்
ஆடி 10 (26-7-74) சுந்தரமூர்த்தி
புர. 20 (6-10-74) திருநாளைப்போவார்
கார். 5 (26-11-74) சேர் பொன். இராமநாதன்
கார். 20 (5-12-74) ஆறுமுகநாவலர்
தை 22 (4-2-75) தாயுமானவர்
மாசி 9 (21-2-75) கச்சியப்பர்
மாசி 15 (27-2-75) திருவள்ளுவர்
பங். 10 (24-3-75) யோகசுவாமி
பங். 15 (29-3-75) காரைக்கால் அம்மையார்

## நடேசர் அபிஷேக தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| சித்திரை | 30 | (13-5-74) | திங்கள் |
| ஆனி | 11 | (25-6-74) | செவ்வாய் |
| ஆவணி | 15 | (31-8-74) | சனி |
| புரட். | 14 | (30-9-74) | திங்கள் |
| மார்கழி | 13 | (28-12-74) | சனி |
| மாசி | 12 | (24-2-75) | திங்கள் |

## நல்லூர் கந்தன் உற்சவங்கள்

| | |
|---|---|
| 25-4-74 | கந்தபுராண ஆரம்பம் |
| 3-6-74 | வைகாசி விசாகம் |
| 16-7-74 | வள்ளி திருக்கலியாணம் |
| 24-7-74 | கொடியேற்றம் |
| 2-8-74 | மஞ்சம் |
| 11-8-74 | கார்த்திகை |
| 13-8-74 | கைலாய வாகனம் |
| 14-8-74 | தெண்டாயுதபாணி |
| 16-8-74 | தேர் |
| 17-8-74 | தீர்த்தம் |
| 18-8-74 | பூங்காவனம் |
| 19-11-74 | சூரசங்காரம் |



## முக்கிய தினங்கள்

சித். 1 (14-4-74) ஆனந்த வருஷப் பிறப்பு
சித். 21 (4-5-74) சித்திரைச் சித்திரை
வை. 20 (3-6-74) வைகாசி விசாகம்
ஆவணி 11 (27-8-74) ஆவணி மூலம்
புரட். 30 (16-10-74) நவராத்திரி
ஐப். 27 (13-11-74) தீபாவலி
ஐப். 28 (14-11-74) கந்தசஷ்டி
கார். 13 (28-11-74) திருக்கார்த்திகை
மார். 5 (20-12-74) திருவெம்பாவை
தை 1 (14-1-75) தைப்பொங்கல்
மாசி 27 (11-2-75) மகா சிவராத்திரி

## பொங்கல்

வைகாசி 20 (3-6-74) வற்றாப்பளை கண்ணகை
வைகாசி 20 (3-6-74) மட்டுவில்-பன்றித்தலைச்சி
ஆனி 17 (1-7-74) தொண்டமானாறு-செல்வச்சந்நிதி
ஆனி 3 (17-6-74) புதூர் நாகதம்பிரான்
ஆடி 7 (23-7-74) கொக்குவில்-தலையாளிஞானவைரவர்
ஆவணி 30 (15-9-74) நயினாதீவு-நாகபூஷணியம்மை
புரட். 18 (14-9-74) உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோவில்-வைரவர்
பங்குனி 25 (8-4-75) தெல்லிப்பளை கிழக்கு துர்க்கையம்மை

## கிரகணங்கள்

**பார்சுவ சந்திர கிரகணம்**
வைகாசி 21 (4-6-74)
**பூரண சூரிய கிரகணம்**
ஆனி 6 (20-6-74)
**பூரண சந்திர கிரகணம்**
கார்த். 14 (29-11-74)
**பார்சுவ சூரிய கிரகணம்**
கார்த. 28 (13-12-74)

## தேவாலய உற்சவங்கள்

| கொடி | | தேர் | தீர்த்தம் |
|---|---|---|---|
| | மானிப்பாய் மருதடி விநாயகர் | 14-4 | 15-4 |
| 18-4 | நீர்வேலி கந்தசுவாமி | 5-5 | 6-5 |
| 3-5 | திருநெல்வேலி காயாரோகணேஸ்வரர் | 20-5 | 21-5 |
| 12-5 | யாழ்ப்பாணம் வில்லூன்றி விநாயகர் | 20-5 | 21-5 |
| 26-5 | கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் | 3-6 | 4-6 |
| 26-5 | உசன் கந்தசுவாமி | 3-6 | 4-6 |
| 27-5 | இணுவில் அம்பலவாணக்கந்தசுவாமி | 19-6 | 20-6 |
| 6-6 | ஆனைக்கோட்டை மூத்தநயினார் | 19-6 | 20-6 |
| 10-6 | வண்ணார்பண்ணை வீரமாகாளியம்மை | 3-7 | 4-7 |
| 17-6 | அராலி மேற்கு விசுவநாதசிவன் | 25-6 | 26-6 |
| 20-6 | பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி | 3-7 | 4-7 |
| 20-6 | நயினாதீவு நாகபூஷணியம்மை | 3-7 | 4-7 |
| 24-6 | நந்தாவில் கற்புலம் அம்மை | 3-7 | 4-7 |
| 19-6 | ஓட்டுசுட்டான் தான்தோன்றியீசுரர் | 3-7 | 4-7 |
| 22-6 | கதிர்காமம் | | 3-8 |
| 22-6 | புங்குடுதீவு குறிகாட்டுவான் மனோன்மணி | 30-6 | 1-7 |
| 25-6 | மாவிட்டபுரம் கந்தசுவாமி | 18-7 | 19-7 |
| 22-7 | நீர்வேலி வாய்க்காற்தரவைப் பிள்ளையார் | 1-8 | 2-8 |
| 23-8 | பொன்னாலை வரதராஜப் பெருமாள் | 8-9 | 9-9 |
| 5-8 | முன்னேஸ்வரம் முன்னைநாதசுவாமி | 31-8 | 1-9 |
| 17-8 | தொண்டமானாறு செல்வச்சந்நிதி | 31-8 | 1-9 |
| 19-8 | தெல்லிப்பழை துர்க்கா தேவாலயம் | 29-8 | 30-8 |
| 16-9 | வல்லிபுரம் ஆழ்வார் | 30-9 | 1-10 |
| 19-9 | வண்ணை வெங்கடேசப்பெருமாள் | 27-9 | 28-9 |
| 20-12 | மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை | 28-12 | 29-12 |
| 16-2 | முன்னேஸ்வரம் முன்னைநாதர் | 24-2 | 25-2 |
| 9-3 | வண்ணார்பண்ணை வைத்தியேஸ்வரர் | 26-3 | 27-3 |
| 18-3 | கொழும்பு பொன்னம்பலவாணேசர் | 26-3 | 27-3 |

## விசேஷ விரதநாட்கள்

| | | | |
|---|---|---|---|
| சித்திரை | 23 | (6-5-74) | சித்திரா பூரணை விரதம் |
| ஆனி | 12 | (26-5-74) | ஆனி உத்தரம் |
| ஆடி | 3 | (19-7-74) | ஆடி அமாவாசை |
| ஆடி | 7 | (23-7-74) | ஆடிப் பூரம் |
| ஆவணி | 23 | (8-9-74) | ஸ்ரீ கிருஷ்ணஜயந்தி |
| புரட்டாதி | 3 | (19-9-74) | விநாயக சதுர்த்தி விரதம் |
| புரட்டாதி | 30 | (16-10-74) | நவராத்திரி விரதாரம்பம் |
| ஐப்பசி | 7 | (24-10-74) | சரஸ்வதி பூஜை |
| ஐப்பசி | 8 | (25-10-74) | விஜயதசமி |
| ஐப்பசி | 28 | (14-11-74) | கந்தசஷ்டி ஆரம்பம் |
| கார்த்திகை | 4 | (19-11-74) | கந்தசஷ்டி விரதம் |
| கார்த்திகை | 13 | (28-11-74) | திருக்கார்த்திகை |
| கார்த்திகை | 15 | (30-11-74) | விநாயக விரதாரம்பம் |
| மார்கழி | 5 | (20-12-74) | திருவெம்பாவை பூஜாரம்பம் |
| மார்கழி | 10 | (25-12-74) | சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம் |
| தை | 14 | (27-2-75) | தைப்பூசம் |
| மாசி | 27 | (11-3-75) | சிவராத்திரி விரதம் |

### அமாவாசை / பௌர்ணமி தினங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சித்திரை | 9 | (22-4-74) | ● | புரட்டாதி | 29 | (15-10-74) | ● |
| சித்திரை | 23 | (6-5-74) | ○ | ஐப்பசி | 13 | (30-10-74) | ○ |
| வைகாசி | 7 | (21-5-74) | ● | ஐப்பசி | 27 | (13-11-74) | ● |
| வைகாசி | 21 | (4-6-74) | ○ | கார்த்திகை | 14 | (29-11-74) | ○ |
| ஆனி | 5 | (19-6-74) | ● | கார்த்திகை | 28 | (13-12-74) | ● |
| ஆனி | 20 | (4-7-74) | ○ | மார்கழி | 13 | (28-12-74) | ○ |
| ஆடி | 3 | (19-7-74) | ● | மார்கழி | 28 | (12-1-75) | ● |
| ஆடி | 17 | (2-8-74) | ○ | தை | 14 | (27-1-75) | ○ |
| ஆவணி | 1 | (17-8-74) | ● | தை | 28 | (10-2-75) | ● |
| ஆவணி | 16 | (1-9-74) | ○ | மாசி | 13 | (25-2-75) | ○ |
| ஆவணி | 30 | (15-9-74) | ● | மாசி | 28 | (12-3-75) | ● |
| புரட்டாதி | 15 | (1-10-74) | ○ | பங்குனி | 13 | (27-3-75) | ○ |
| | | | | பங்குனி | 28 | (11-4-75) | ● |

★ றபர் சீல்
★ சிலேட்
★ புகைப்படம்
★ புளொக்ஸ்
தயாரிப்பாளர்

கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம் தொலைபேசி : 410

★ போட்டோ ஸ்ரட்
★ புளூ பிறின்ட்
தயாரிப்பாளர்
PHOTO STAT & BLUE PRINT MAKERS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

அபிஷேகத் திரவியங்கள்
சந்தனக்குழம்பு
(மைசூர், அவுஸ்திரேலியா, சந்தனக் கட்டைகளால் தயாரிக்கப்பட்டவை.)
0 பழனி வாசனை விபூதி
0 அபிஷேக குங்குமம்
0 பஞ்சாமிர்த சாமான்கள்
0 நைவேத்திய சாமான்கள்
0 அஷ்டபந்தன மருந்து
0 அத்திபாரமிடும் பொருட்கள்
0 விவாக முகூர்த்த பொருட்கள்
வாசனை நிறைந்த தெய்வீக மணம் கமழும்
0 "ராதா" பத்மினி ஜவ்வாது பத்தி
0 99 & 999 ஜவ்வாது பத்தி
0 இந்திராணி பத்தி
0 சக்தி, பூஜா அகர் பத்திகள்
0 மட்டிப்பால் பத்திகள்
விளைவு கூடம் சாம்பிராணி
கோவில் தேவைகளுக்கான
சகல விதமான சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
மற்றும் மருந்துகள், மருந்துச்சரக்குகள்
ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தாரின்
தயாரிப்புகள் மலிவாகக் கிடைக்கும்

எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்குகள் கோவில் அபிஷேகத்திரவிய வியாபாரம்)
53, கே.கே.எஸ்.ரோட், யாழ்ப்பாணம். போன்: 541, வீடு: 7068
160, செட்டியார் தெரு, கொழும்பு-11. போன்: 25825


# இல்லத்தரசிக்கு ஒருவேண்டுகோள்



இன்னலுக்கு இல்லாமையின் மத்தியில் ஆனந்த ஆண்டாம் புத்தாண்டு பிறக்கிறது. சதக் கணக்கில் கொடுத்து வாங்கிய பொருட்களுக்கெல்லாம் ரூபாய்களைக் கொட்டவேண்டியிருக்கிறது. அன்றாடம் பாவனைக்கு வேண்டிய பல பொருட்களே இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன.

இல்லாமை, தட்டுப்பாடு, விலையேற்றம் இவற்றிற்கு மத்தியில் பிறந்துவிட்ட புத்தாண்டுக்கு இல்லாள் சவால் விட்டுச் சமாளிக்கவேண்டிய சூழ்நிலை நிமிடத்துக்கு நிமிடம் உருவாகிக்கொண்டிருக்கிறது. என்ன செய்வது என்று வாழாவிருப்பதைத் தவிர ஏதாவது விலை கூடிய பொருட்களை சிக்கனமாகப் பாவித்து இல்லாத பொருட்களுக்கு ஏங்காமல் உணவு தயாரித்து குடும்பத்துக்கு அளிப்போம் என்று ஒவ்வொரு இல்லத்தரசிகளும் இடைக்கிடைப் பல எடுத்துச்சொல்லுங்கள். அப்பொழுதுதான் ஆனந்த ஆண்டை ஆனந்தமாக வழி நடத்திச்செல்லலாம்.

இந்தத் திடசங்கற்பத்தை எடுத்துவிட்டு எப்படிச் சமைப்பது என்று யோசிக்கிறீர்களா? உங்களுக்கு நானும் உதவுகிறேன். தேங்காய் இல்லாமல் எப்படிச் சமைப்பது என்பதைவாரம் ஒரு கறிதந்து உதவிசெய்கிறேன். நீங்களும் உங்கள் சிக்கன சமையலை எழுதி அனுப்புங்கள். பிரசுரித்தால் நீங்கள் மட்டுமன்றி எல்லோரும் பயனடைந்து இன்புற்று வாழ்வார்கள்.

இவ்வாரம் 80, 90 சதம் என்று ஏறிக்கொண்டு போகின்ற தேங்காய் இல்லாமல் உருளைக் கிழங்குக் கறியை எப்படிச்செய்யலாம் என்று பாருங்கள்.

## உருளைக்கிழங்குக் கறி

தேவையானவை:-

- உருளைக்கிழங்கு - 1 ராத்தல்
- வெங்காயம்-2 மேசைக் கரண்டி (நறுக்கியது)
- நல்லெண்ணெய் -1 மேசைக் கரண்டி
- உளுந்தம்பருப்பு-1தேக் கரண்டி
- மிளகாய்த்தூள்- 1 தேக் கரண்டி
- காய்ந்த மிளகாய்-4
- கடலைப்பருப்பு -1 தேக் கரண்டி
- உப்பு-தேவைக்கேற்ப
- கறிவேப்பிலை- ,,

செய்முறை:-

உருளைக்கிழங்கை அவித்து உரித்து நறுக்கி வைத்துக் கொள்ளவும். மஞ்சள் தூள் போட்டு வேகவிட்டால் விரைவில் அவிந்துவிடும்.

பின்னர் நல்லெண்ணெயில் மிளகாய், வெங்காயம், கடுகு, கறிவேப்பிலை, உளுந்தம்பருப்பு, கடலைப்பருப்பு யாவற்றையும் தாளிதம் செய்து அதற்குள் நறுக்கிய உருளைக்கிழங்கையும் போட்டு வைக்கவும். சிறிது நேரத்தின்பின் உப்புத்தண்ணீரும் மிளகாய்த்தூளும் போட்டு மேலும் வதக்கி இறக்கிவிடவும். இதற்கு தேங்காய் தேவையில்லை.

....கே- ஜி.

## ஒன்று ..

[4-ம் பக்கத் தொடர்ச்சி]
எப்படி ஆனந்தம் பிறக்கப் போகுதென்று சொல்லுங்கோ!"

'ஏன் சந்தேகப்படுகிறாய்' என் ஆனந்தமே! அதோ பார், கொழும்புத்துறைமுகம் நிறைய கப்பல்களை! அங்கே இடம் போதாதென்று சிலவற்றை காலிக்கும், திருக்கோணமலைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் அனுப்புகிறார்கள். சீனாவிலிருந்து அரிசியும், அமெரிக்காவிலிருந்து மாவும், பாகிஸ்தானிலிருந்து சீனியும், இந்தியாவிலிருந்து பருப்பும், ரஷ்யாவிலிருந்து இந்த நான்கும் இந்தக் கப்பல்களில் வந்துகொண்டிருக்கின்றன. பாரம் அதிகமான படியினால் அவை வந்து கொள்ளுவது கஷ்டமாயிருக்கிறது. கொஞ்சம் பொறுத்திரு.'

'மௌனமென்பது ஞான வரம்பு' என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டது 'இஞ்சாய்'.


எல்லோருக்கும் எமது அன்பு கலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
சீப்சைட்
(வட இலங்கையின் புகழ்பெற்ற ஜவுளி வியாபாரிகள்)
7, 8, நவீனசந்தை — யாழ்ப்பாணம்.

எல்லோருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்


நீடித்த உழைப்பதில் நிகரேதும் இல்லாதது
டெகனைட்
பற்றரிகளே
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்
துரை அன் கோ.
23/3, ஸ்ரான்லி ரோட் — யாழ்ப்பாணம்.
கிளை:- கண்டி ரோட் — பரந்தன். போன்: 7313

எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
எல்லாவிதமான அலுமினியப் பாத்திரங்களும் சிறந்த முறையில் ஒட்டிக்கொடுக்கப்படும்.
மிளகாய், கத்தரி, புகையிலைக்கன்றுத் தோட்டங்கள் சாறும் கைக்கருவிகள் விற்பனைக்குண்டு. இலகுவாகவும், இலாபகரமாகவும் பெரிய தோட்டங்களில் உபயோகிக்கலாம்.
ராதா மெஷின் கொம்பனி
11. காங்கேசன்துறை வீதி—யாழ்ப்பாணம்.
(பொன்னம்மா மில்)

எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
தரமான தளபாடங்களை
பெறுவதற்கு சிறந்த ஸ்தாபனம்
சதா ஹோம் நீட்ஸ்
280, கே. கே எஸ். ரோட், — யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன் கோவிலுக்கு அண்மையில்)

மணிக்கூடுகள்! வாத்தியக் கருவிகள்!!
உத்தரவாதத்துடன் திருத்துவதற்கோ, வாங்குவதற்கோ சிறந்த ஸ்தாபனம்
நாதன் மியூஸிக்கல்ஸ்ரோர்ஸ்
முனீஸ்வரன் வீதி. யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஸ்ரீகிருஷ்ணு
(வண்டத்தரிப்பு)
தினசரி 6-30, 9-30
ஜெய்சங்கர்-விஜயா
பெண்ணை
வாழ விடுங்கள்

அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
REGAL Jaffna
Daily 4-45, 7, 9-30 p.m
James Garner
SUPPORT YOUR
LOCAL GUNFIGHTER

சினிமா ரசிகர்கள் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்
அன்புகலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
லிடோ
(யாழ்ப்பாணம்)
தினசரி
காலை 10-30, பி.ப. 2-30,
மாலை 6-30, இரவு 9-30,
"சூரியகாந்தி" படத்தில் சிறப்பாக நடித்தமைக்காக நடிகை ஜெயலலிதாவை 1973-ம் ஆண்டின் சிறந்த நடிகையாக "பிலிம் பெயர்" சினிமா பத்திரிகை ஸ்தாபனம் தெரிந்தெடுத்துள்ளது.
இது ஒரு குடும்பக் கதையாதலால் அனைவரும் பார்க்க வேண்டிய படம்.
முத்துராமன் - ஜெயலலிதா
சுந்தரராஜன் - சாவித்திரி - சோ - மனோரமா
நடிக்க
சூரியகாந்தி

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி
காலை 10-30 பி. ப. 2-30
மாலை 6-30, இரவு 9-30
எம். ஜி. ஆர்—சரோஜாதேவி
நடித்த
படகோட்டி

# மொரிஸியஸ் பிரதமர் டில்லியில்

புதுடில்லி, ஏப்ரல் 12
மொரிஷியஸ் பிரதமர் ராம் குலாம் இன்று டில்லி வந்து சேர்ந்த பொழுது மிகப் பிரமாண்டமான வரவேற்பளிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் இந்திய பிரதமர் இந்திரா காந்தியும் ஏனைய மந்திரிசபை அங்கத்தவர்களும் இவரை வரவேற்றனர்.

அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
சாந்தி
(சுன்னாகம்)
ஞாயிறு 10-30
VIKING WHO COMB
FROM SOUTH
கண்டிப்பாக வயதுவந்தவர்க்கு மட்டும்.
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி—சாவித்திரி
நடித்த
ரத்ததிலகம்

அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
வெலிங்டன்
(சாவகச்சேரி)
தினசரி 6.30 9-30
சனி ஞாயிறு 10-30 2-30
ஏ.வி.எம். ராஜன்- லக்ஷ்மி
நடித்த
புகுந்தவீடு

அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
3-வது வெற்றி வாரம்
நாகலிங்கம்
சுன்னாகம்
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர்.—ஜெயலலிதா
எங்கள் தங்கம்
(ஈஸ்ட்மென் கலர்)

# சிறுகதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏறிக்கொண்டிருந்தது. இருண்டு குழிவிழுந்துபோயிருந்த கண்களில் இருந்து இரண்டு சொட்டுக்கண்ணீர் வழிந்து, உலர்ந்து போயிருந்த அவளின உதடுகளை நனைத்தது.

"அடியே மாரி! இன்னு செஞ்சுட்டிருக்கே?... என்னு ஒங் கூடையில கொழுந்தே நெறயலையே... எவ்வூட்டுக் கூடையில நெறஞ்சட்டுது. நீ என்னுன்னு?...

ஏய் ஏய், அழுவுறியா?"

"இல்லே பச்சை!... ஏதோ பழையசை நெனச்சுட்டேன். நீ போ ஒன் பின்னுடி வந்துடறேன்"

மாரியம்மா ஏதோ நினைத்துக்கொண்டவள்போல் வேகமாக ஓடி, ஓடிக் கொழுந்தை எடுக்கத்தொடங்கினுள்.

குளிர்காற்று மெல்ல வீசத் தொடங்கியது. மேகங்கள் இருண்டு வந்தன... மழை வருவதற்கான அறிகுறிகள் தெரிந்தன. கொழுந்து எடுத்துக் கொண்டிருந்த பெண்களில் மாரியம்மாவைத்தவிர, மற்றையவர்கள் எல்லோரும் சென்றுவிட்டனர்.

சிறுதூறலாக ஆரம்பித்த மழை, 'சோவென்ற' இரைச்சலுடன் பெருமழையாகியது. அவளுடைய ஆடைகள் முற்றாக நனைந்துவிட்டன அப்படியே கூடையுடன் ஓடிச்சென்று கொழுந்து நிறுக்கும் அறையில் போய் ஒதுங்கினுள். அங்கே மழைக்காக ஒதுங்கிக்கொண்டிருந்த கங்காணியைத் தவிர வேறு ஒருவரும் இல்லை.

மழை வந்தால் துள்ளித் துள்ளி நகர்ந்து, மனிதன் குருதியை உறிஞ்சிச் சுகம் காணும் மலை அட்டைகளுக்குப் பெரும் கொண்டாட்டம் தான்.

"ஏம்மா மாரியம்மா! நீ இன்னும் போகலையா? மத்தவங்க எல்லாம் போயிட்டாங்க... நீ மட்டும் இன்னு செஞ்சுகிட்டிருந்தே?" —குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த மாரியம்மாவின் அருகில் வந்த கங்காணி மாணிக்கம் கேட்டான்.

"கொழுந்தெடுத்துக்கிட்டிருந்தேன். அப்பத்தான் நேரமாச்சுங்க." அவள் இதைச் சொல்லிக்கொண்டே ஓரத்தில் நின்று நடுங்கிக்கொண்டிருந்தாள். அவளுடைய ஆடைகள் மழையில் நனைந்து உடலுடன் ஒட்டியிருந்தது. ஊறிப்போயிருந்த ஆடையினூடாக அவளுடைய சிவந்த உடல் மினுங்கிக் கொண்டிருந்தது. அந்த ஒரு நிமிடம் செயலற்று நின்ற மாணிக்கம் தன்னையே மறந்தவனாய்த் தடுமாறினுன்.

'ஏன் குளிர்லே நடுங்கிண்டிருக்கே? இந்தா ஈரத்தைத் தொடச்சிட்டு ஒன் சேலையை உலர்த்திக்கோ." - மாணிக்கம் தன் மேல் துண்டை எடுத்து நீட்டினுன். அவன் குரலில் குழைவும் உடலில் தெளிவும் தாண்டவமாடியது.

"இருக்கட்டுங்க. நான் ஊட்டுக்குப் போயி மாத்திக்கிறேனுங்க" -அவன் கொடுத்த மேல்துண்டை வாங்க மறுத்துவிட்டு வெளியே இறங்கி நடக்கத் தொடங்கினுள். மாணிக்கம் ஓடிச்சென்று அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே 'என்னு பொண்ணு நீ. மழை உழுந்திட்டிருக்குத் தெரியலே? எம்புட்டுத்தூரம் நீ போவணும்? நின்னுக்கோ. அப்புறமாப் போகலாம்" என்முன்.

"என்னையா ஒனக்கு அறிவிருக்கா. தனியாக உள்ள பொண்ணு கிட்டே இப்படியா நடந்துக்குவாங்க" அவன் முகத்தில் காறி உமிழவேண்டும்போல் இருந்தது. ஆனுல் அவள் அப்படிச் செய்யவில்லை. அவள் நினைத்ததைச் செய்திருந்தால் அவளுக்கும் அவளுடைய குடும்பத்திற்கும் நடக்கும் கதியோ வேறு.

தன் ஆத்திரம் முழுவதையும் ஒன்றுசேர்த்துப் பார்வையாலேயே காட்டிவிட்டு 'வெடுக்கென்று' சாலையில் இறங்கி நடக்கத் தொடங்கிவிட்டாள். இப்படி ஓர் எதிர்ப்பை எதிர்பாராத மாணிக்கம் கதிகலங்கி நின்முன். வயிற்றுப் பிழைப்புக்காக அண்டிப் பிழைப்பார்களே ஒழிய, மானத்தை விற்றுப் பிழைப்பவர்கள் இன்று இல்லை. இதை மாணிக்கம் என்றோ உணர்ந்திருக்க வேண்டும். மாரியம்மா, மாணிக்கத்தின் எண்ணத்திற்கு இசைந்திருந்தால் தோட்டத்தில் இறங்காமலேயே அவளால் கூலியைப் பெற்றிருக்க முடியும்.

பயத்தால் உடல் நடுங்க வேகமாக ஓடிக்கொண்டிருந்த மாரியம்மாவுக்குக் கண்ணை இருண்டு வந்தது....மழை பெய்து தரையெல்லாம் சேறும் சகதியுமாக இருந்ததால் அவள் ஓடிய வேகத்தில் சறுக்கி விழுந்தாள். பள்ளத்தாக்கை நோக்கி ஓடிக்கொண்டிருப்பது அவளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைத்தானே?

அன்று அந்த லயத்திலே ஒலித்த ஓலம், அந்தத் தோட்டமெங்கும் ஒலிப்பதுபோல் இருந்தது.

குழந்தைகள் மூன்றும் ஒன்றின் மேல் ஒன்று விழுந்து அழுதன. பெரியவன், சின்னவனைத் தேற்றிக்கொண்டே தேநீரை வாயில் ஊற்றினுன். ஆம், ஒரு தாயின் ஜீவன் சிதைந்தது. அந்த மூன்று கொழுந்துகளும் கருகிக்கொண்டிருந்தன.

[யாவும் கற்பனை]



சினிமா ரசிகர்கள் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
ரியோ (நகர மண்டபம் யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, மாலை 4-45, 7-15, 9-45
லீ வான் கிளிவ், கரோல் பேக்கர்
ஸ்ருவட் வைற்மன்
நடித்த
கப்டன் அப்பாச்சி
CAPTAIN APACHE
(கலர்)

சினிமா ரசிகர்கள் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
புததாண்டு வாழ்த்துக்கள்
இப்பொழுது திரையிடப்படுகிறது
யாழ். வின்சர் வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்
இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படம்
அர்ஜுனுவின்
கலியுக காலம்!

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எஸ். ரி. ஆர் பிலிம்ஸ்
ஸ்தாபனத்தினர் தமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றனர்.
ராஜா கடைசி வாரம்
(யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர்—சாவித்திரி
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஜக்கம்மா

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது அன்புகலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30,
பி. ப. 4-45, 7-15, 9-30
சுசி கொண்டல்-பிராங் பிண்லே
ASSAULT—அசோல்ற்
(பின்னைகள் வயதுவந்தவர்களுடன்—கலர்)

சினிமா ரசிகர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
ராணி சினிமா எம்.ஜி ஆர்-ஜெயலலிதா
(யாழ்ப்பாணம்) அசோகன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
மாட்டுக்காரவேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை

## சூரிய குடும்பத்தின் இரட்டையர் ஒன்று சேருகின்றனர்

விண்வெளியில் ஏற்பட விருக்கும் அபூர்வமான கண்கொள்ளாக் காட்சி- ஒளிமிக்க ஜோடிகளின் ஆனந்தமான கூட்டுறவு- சூரிய குடும்பத்தின் இரட்டையரான பிரமாண்டமான வியாழனும் பிரகாசமான வெள்ளியும் ஒன்று சேரும் வித்தை-குருவும் சுக்கிரனும் கூடிக் குலாவும் நாடகம் ஆனந்த வருடப் பிறப்புடன் சேர்ந்துவரும் ஆனந்தமான காட்சி, இது ஏற்படவிருக்கும் பொன்னாள் நாளை திங்கட்கிழமையாகும்.

பிரசித்திபெற்ற இரு கோள்கள் அண்மித்துவரும் இந்நாள் சுபகருமங்களை ஆரம்பிப்பதற்கு மிகச் சிறந்த நன்னாளாகும்.

இக்காட்சியைக் காண்பதற்கு எடுக்கும் பிரயாசம் வீண்போகாது. இதனைக் கண்டு ரசிக்க விரும்புபவர்கள் நாளை அதிகாலை 3-30 மணிக்கு எழுந்து தென்கிழக்கின் கிழக்குப் பக்கமாகப் பார்க்கவும். வான சாஸ்திரத்தின் சரித்திர வரலாற்றிலேயே அபூர்வமான இச் சேர்க்கையின்போது இச்சோடி ஒன்றுக்கொன்று ஒருபாகை அல்லது இரண்டு சந்திரவிட்ட இடைவெளியில் இருக்கும்.

வெள்ளி தனது தன்மைக்கேற்பத் தனது ஜோடி வியாழனைவிட ஏழுமடங்கு பிரகாசமாகவிருக்கும். வெள்ளி வடபுறமாகவும் வியாழன் தென்புறமாகவும் கும்பராசியில் உலாவிவரும்.

இவர்கள் பார்வைக்கு நெருங்கியிருப்பது போலத் தென்பட்டாலும் வெள்ளி பூமியிலிருந்து 7 கோடி 15 லட்சம் மைல் (6 1/2 ஒளி நிமிடம்) தூரத்திலும் வியாழன் பூமியிலிருந்து 58 கோடி 60 லட்சம்மைல் (47 ஒளி நிமிடம்) தூரத்திலுமுள்ளன. இவை ஒரே வரிசையில் வருவதனால் நெருங்கியிருப்பதுபோலத் தெரியும். அன்றைய தினம் வெள்ளியும் வியாழனும் சூரியனுக்கு மேற்கில் 46 பாகையில் இருக்குமாம்.

மறு தினங்களில் வியாழன் வெள்ளியை முந்திக்கொண்டு முதலில் உதித்து வானில் உயர்ந்திருக்கும்.

—ஏ-கி-ஜி-பிரிட்டோ.

# ஆனந்த வருடமே வருக! வருக!!

பிரமாதீச வருடத்திற்கு விடைகொடுத்து பிறக்கும் ஆனந்த வருடமே வருக வருக என்று வாழ்த்தி வரவேற்கும் புத்தாண்டு செய்திகள் உங்களுக்குத்தான்.

பண்டிதமணி ஆசிச்செய்தி:

"நமக்குவரும் இன்பத்துன்பங்கள் நமது நன்மையின் பொருட்டு. திருவருள் நீதி நமக்கு ஊட்டு பவைகள். இதனை மறந்த விருப்புவெறுப்புக்கொள்வதால் வினையும் அநர்த்தங்கள் அளவு கடந்தவை. துன்ப அநுபவங்கள் வருகிறபோது அவற்றுக்குவழியாக இருப்பவர்களை நோவது எம் தலையிலுக்க அம்மியை நோவது போலாம்.

இன்பத்துன்பஅநுபவகாலத்தில் ஊக்குவதன் நீதியைக் கணந்தோறும் விசாரித்தபடியிருப்போமாயின், வையத்து வாழ்வாங்கு வாழும்வழியில் காலூன்றி வைத்தவர்களாவோம்.

புதிய ஆனந்த வருஷத்தில் திருவருள் நீதியை விசாரிப்போம் என்று சங்கற்பித்துக்கொண்டு சித்தசமாதானத்துடன் புதுவாழ்வுக்குவழிசெய்வோமாக. அதுவேபரமசுகம்"

★

தமிழர்கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தின் புத்தாண்டுச் செய்தி!-

நாட்டுமக்கள் முழுப்பேரையும் வாட்டிவதைக்கும் பஞ்சமும் பிணியும் ஒருபுறமும் அரசியல் அடிமைத்தனத்தினால் அடையும் துன்பம் மறுபுறமுமாக இருமுனைத் தாக்குதலில் அகப்பட்டுள்ள தமிழினம் ஆனந்தம் என்ற பெயரைத் தாங்கிவரும் புத்தாண்டானது அவ்வல் நீக்கி ஆனந்தத்தைத் தரமாட்டாதா என்று எதிர்பார்ப்பது இயற்கை. சுதந்திரத்துக்கு-சுபீட்சவாழ்வுக்கு குறுக்குவழி கிடையாது என்பதையே இப்புத்தாண்டில் தமிழினத்துக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கடும் உழைப்புக்கும் பேர்போன தமிழ் சமுதாயம் தன் உழைப்பினால் மற்றவர்களைச் செல்வச் செழிப்போடு வாழவைத்து வந்திருக்கிறது. புத்தாண்டிலாவது தமிழினத்தின் உழைப்பினால் தமிழன் விடுதலைபெற்று வாழவும் வழிகாட்டுமாறு ஆண்டவனை வேண்டுகிறேன்.

நல்லூர் எம்.பி.யும் வடபகுதி அரசியல் அதிகாரியுமான திரு. சி. அருளம்பலத்தின் புத்தாண்டுச் செய்தி:-

பிரமாதீச வருடம் முடிந்து ஆனந்தவருடம் பிறக்கிறது. இந்த பிரமாதீச வருடத்தில் உலகநாட்டுமக்கள் மாத்திரமின்றி எமது நாட்டு மக்களும் பிரதானமாக உயர்வு குறைவால் பாதிக்கப்பட்டனர். இதை சம்மாதிரி சமாளிக்கலாம் என்ற ஆலோசனைக்கு எடுத்த பிரதமர் மக்கள் பிரதிநிதியாகவும் திருமதி அவர்களே தமது சேவைமூலம் இந்த நாட்டு விவசாயிகளை ஊக்குவித்து விவசாயத்துக்கு புத்துயிர் கொடுத்து விவசாயத்தின் வளர்ச்சிமூலம்தான் உணவுநிறைவைக் காணலாம், எமது மக்களின் பட்டினியை நீக்கலாம் என்ற உறுதியுடன். 22மாவட்டங்களில் 22 அரசியல் அதிகாரிகளை நியமித்தார். அதன் பெறுபேறாக யாழ்மாவட்டத்துக்கு கடமையை ஏற்றுக்கொண்ட நான் எமது பகுதியில் எம்மால் இயன்றளவு முயற்சி எடுத்து இக்காலபோகத்தில் நெல் விளைவில் நிறைவையும் மற்றும் உபஉணவுப் பொருட்கள் அதிகரிப்பையும் கண்கூடாகப் பார்க்கிறோம்.

பிறந்துள்ள ஆனந்த வருடத்தில் இந்நாட்டில் இந்நாட்டு மக்களுக்குத் தேவையான உணவைப் பொறுத்த மட்டில் நிறைவும் திருப்தியும் காணுவோம் என்பது எமது நம்பிக்கை. இந்த அரும்பெரும் நோக்கத்துக்கும் பணிக்குமாக இந்த நாட்டிலுள்ள மக்கள் அனைவரையும் தேசிய உணர்வுடன் விவசாயத்தில் உழைக்க அழைக்கிறேன்.

மேயர்

★

யாழ். நகர மேயர் திரு. அல்பிரட் துரையப்பாவின் புத்தாண்டு செய்தி:

ஆனந்தவருடத்தில் இந்நாட்டிலுள்ள சகல மக்களும் தேசிய உணர்வுடன் புதுயுகம் ஒன்றைப் படைக்கும் அரசின் பெரும் நோக்கை செயல்படுத்தும் பணியில் அயராது உழைப்போம். சோஷலிச சமுதாயம் ஒன்றை உருவாக்கி எல்லோரும் ஒன்று பட்டு வாழ்வோம்.

# பித்தன் தபால்கள்



ஜனாதிபதி நிக்ஸன்,
நியூயோர்க்.

அதிபரே!

உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை என்றுபாடினார், பாரதியார்.

'வாட்டர்கேட்' விஷயமாகத் தங்கள் உச்சியில் பெரிய இடி விழுந்தது. வேறு யாராவதாக இருந்தால், அந்தப்பதவியிலிருந்து ஓட்டம் பிடித்திருப்பார்கள். ஆனால் தாங்களோ, என்னவந்தாலும் சரி அப்பதவியிலிருந்து விலகுவதில்லையென்று விடாப்பிடியாக மேலான அரசியல்ஞானம் காட்டிவருகிறீர்கள். தங்கள் உறுதிக்கு என் பாராட்டுகள். உலகசரித்திரத்தில் தங்கள் மாதிரி யாருமே உண்டா?

"வாட்டர்கேட்" விவகாரம் என்ன ஆகுமோ என்றுகவலைப்பட்டுக் கொண்டிருக்கையில், இடிமேல் இடிவிழுந்ததுபோல் வருமானவரிப்பிரச்னை ஏற்பட்டது. தாங்கள் பல வருடங்களாக வருமானவரியை சர்வரக் கட்டவில்லை என்றும் நாலரை லட்சம்டாலர் பாக்கிசெலுத்த வேண்டுமென்றும் அதிகாரிகள் நோட்டீஸ்பிறப்பித்ததும் அவ்வளவையும் பேசாமல் கட்டிவிட்டீர்களாம்!

தாங்கள் சமீபத்தில்தான் சத்தவட்சாதிபதி யானதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் யார் வைத்த கண்ணோ, வரிபாக்கிக்காகத் தாங்கள் கடன்படவும் வேண்டியிருந்ததாக ஒருசெய்திதெரிவித்தது. அடபாவமே!

உலகிலேயே வல்லரசுகளில் இன்று முதன்மையாகவிளங்குவது அமெரிக்காதான். அதன் ஜனாதிபதியாக உள்ளவர் மீது சிறிதாவது பரிவானதை காட்ட வேண்டாமா? அமெரிக்கப்பத்திரிகைகள் பலவும் தங்களைப் பற்றி எழுதிவருவதைப் படிக்கையில், அந்த ஜனாதிபதி பதவி ஏழு ஜன்மத்துக்கும் வேண்டாம் என்றே எண்ணத் தோன்றுகிறது. இவ்வளவுசோதனைகளுக்கிடையிலே தாங்கள் மனநிம்மதியுடன் தூங்கமுடிகிறதா?

இவ்வளவு சங்கடங்களுக்கு இடையிலும் தாங்கள், பாரிஸில் செத்தவீட்டுக்குச்சென்று வல்லரசுத் தலைவர்களைச் சந்தித்து 'கொமாரு' நடத்தியிருப்பதைக் கேட்டு வியப்படைந்தேன். தாங்கள் அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, அகில உலகத்துக்கும் ஜனாதிபதி. உலக அமைதியும், சிறப்பாக ஆசிய மக்களின் தலையெழுத்தும் தங்கள் கையில்தான் இருக்கிறது.

மேற்குஆசியாவில் ஏற்பட்ட சமீபசம்பவங்கள், இந்த நிலைமையை பெரிதும் மாற்றிவிட்டது. தங்கள்நேசர்களான ஐரோப்பியவல்லரசுகளும்கூட தங்கள்பேச்சைக்கேட்கவில்லை. அமெரிக்காவிலும் பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதாம். என்ன காரணம்? எனக்கு உலக அரசியல் ஒன்றும் தெரியாது. ராஜதந்திரியும் அல்ல. ஆனால் ஒன்று. தங்களுக்கு முன்னிருந்தவர்கள், ஆசியாக்காரரும் ஆசியாக்காரரும் அடித்துக் கொல்லட்டும் என்ற அதர்மமான, மனிதாபிமானமற்ற கொள்கையைக் கடைப்பிடித்து, ஆசிய நாடுகளில் அமைதியில்லாமற் செய்துவரக் காரணமாக இருந்தார்கள். அதே கொள்கையைத் தாங்களும் பின்பற்றியதால்தான் தங்களுக்கும் தங்கள் நாட்டுக்கும் இந்தக்கஷ்டம் என்று கருதுகிறேன். கெடுபிறர்க்கெண்ணத் தான் அழிவான் என்பது சாத்திரம். கெடுவான் கேடு நினைப்பான் என்பது தமிழ்முதுமொழி. இதையெல்லாம்யோசித்து, அமெரிக்காவின் அந்தத்தவறான கொள்கையை தாங்கள் மாற்றமுடியுமா? மாற்றினால் அமெரிக்காவுக்கு மட்டுமன்றி உலக மக்களுக்கே நன்மைசெய்தவராவீர்கள்.

இப்படிக்கு,
பித்தன்.

குறிப்பு:

தங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த சோதனையால் ஒருபெரிய உண்மை வெளியாகிறது. அமெரிக்காவில் ஜனாதிபதியை விட, பத்திரிகைச்சுதந்திரமும், ஜனநாயகமும்மேலானதெனும் பழுவதைக்கண்டு வியப்படைகிறது. இதற்காகத் தங்களுக்கு நன்றி. அந்த ஜனநாயகமும் பத்திரிகைச் சுதந்திரமும் நீடூழிவாழ்க!

—பி—

★

டாக்டர் அல் ஹாஜ்பதியுதீன் மஹ்மூத் அவர்கள்,
கல்வி அமைச்சர்,
கொழும்பு.

மாண்புமிகு அமைச்சர் அவர்களே!

மிகவும் சங்கடமும் பொறுப்பும் வாய்ந்தது தங்கள் அமைச்சு. நிதிஅமைச்சருக்கு அடுத்தபடியாக இப்போதுதங்களையே பலரும் குறைகூறி ஏசுகின்றார்கள். இது தங்களுக்கும் தெரியும். ஆனால் இச் சமயத்தில் வேறுயாவரும் அந்தப்பதவியை வகித்தாலும், எதிர்நோக்கியுள்ள புதிய போன்ற கல்விப் பிரச்னையை அவர்களால் வெற்றிகரமாகத் தீர்க்கமுடியுமா? மிகவும் சந்தேகம்.

சென்றமுறை பல்கலைக்கழக பிரவேசத்துக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கு (அட்வான்ஸ் லெவல்) சுமார் 35 ஆயிரம் மாணவமாணவிகள் தோற்றினர். வருடாவருடம் அவர்களது எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன், மாணவரின் அறிவாற்றல்களும் வரவர அதிகரித்துவருகின்றன. இதை எதிர்பார்த்து அதற்குத்தகுந்தபடி அதிக பல்கலைக்கழகங்களை ஏற்படுத்தவேண்டும். அப்படிச் செய்திருந்தால், தரப்படுத்துதல், தகுதிபெற்ற மாணவர்களையும் சேர்க்காமல் ஒதுக்குதல் முதலிய விரும்பத்தகாதமுறைகளைத் தாங்கள் கைக்கொள்ள வேண்டியிராதல்லவா?

தங்களுக்கே இதெல்லாம்சற்றும் பிடிக்கவில்லை என்பது எனக்குத்தெரியும். விஞ்ஞானப்பரீட்சையில் சித்திபெற்ற எல்லாமாணவர்களையும் பல்கலைக்கழகத்தில் எப்படியும் சேர்க்கவேண்டுமென்று பகிரங்கமாகத்தாங்கள் வற்புறுத்தவில்லையா?

பரீட்சையில் சித்திபெற்றும் கூட பல்கலைக்கழகத்தில் சேர முடியாது போனதைக்குறித்து சம்பந்தப்பட்ட மாணவரும் அவர்களது பெற்றோர்களும் மட்டுமன்றி பொதுவாக மாணவஉலகமேபெரும் ஏமாற்றமும் திகைப்பும் அடைந்துள்ளது. கஷ்டப்பட்டுப் படித்தும் என்னபயன் என்று கலங்குகின்றனர்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, காலி இம்மூன்று இடங்களிலும் மூன்று பல்கலைக்கழக வளாகங்களை அமைப்பதாக சுதந்திரக்கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதி கூறியிருந்தது. பதவிஏற்றதும் அதை அமுல்செய்ய முன்வந்திருந்தால், இன்றைய அவலநிலை ஏற்பட்டிராதல்லவா? போகட்டும் இனியாவது தாமதமின்றி அந்த மூன்று புதிய வளாகங்களையும் ஏற்படுத்தச் செய்வீர்களா? ஏற்கனவே பரீட்சை

(2-ம்பக்கம் பார்க்க)

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE-DOLLAR

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu, P. O. No. 49, Jaffna. Telegram: Eelanadu.
Telephone: 889 புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org